விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு ═══ Valampurii ═══

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 03 திங்கட்கிழமை (15.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 58

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

RAMCO

# நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்க் கட்சிகளின் கூட்டணி உதயம்

## தமிழ்க் கூட்டமைப்புத் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் உட்பட அனைத்து தமிழ் கட்சிகளையும் ஒன்றிணைத்து சிறுபான்மை மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடிய வாறு இணைந்து செயற்படவுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவைப் பணயம் வைத்து தேர்தலில் வெற்றி பெற அரசு முயற்சி

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவை பணயம் வைத்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெற முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சுமத்தியுள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையையோ (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசியக் கட்சி யாழில் போட்டியிடும்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யாழ்.மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடும் என அதன் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சத்தியேந்திரா தெரிவித்தார்.

இத் தேர்தலில் போட்டியிடுவதெற்கென 12 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி யாழ். மாவட்டத்தில் போட்டியிடாது என்ற கருத்து நிலவுவதாகவும் அது தவறானது எனவும் அவர் கூறினார். (சு)

## பொதுத் தேர்தலில் யானைச் சின்னத்தில் ஜே.வி.பி. போட்டியிடப் போவதில்லை

### ரில்வின் சில்வா உறுதியளிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் தாம் யானைச் சின்னத்தில் போட்டியிடமாட்டோம் என்பதை ஜே.வி.பி. உறுதிப்படுத்தியுள்ளது.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது அக்கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா இதனைக் குறிப்பிட்டார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக அக் கட்சியின் செயற்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் செயற்குழுவின் தீர்மானம் இறுதியானது அல்ல எனவும் அதனை அக் கட்சியின் தலைவர் மாற்றலாம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மா (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு யாழிலிருந்து புதிய முகங்கள் அறிமுகம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் புதிய முகங்களை அறிமுகப்படுத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதிவான் சி.வி.விக்னேஸ்வரன், ஓய்வு பெற்ற பேராசிரியர் சி.கே.சிற்றம்பலம் மற்றும் முன்னாள் யாழ்.மாநகர சபையின் ஆளுநர் சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோரை களமிறக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தூதுவரை அழைத்து எதிர்ப்புத் தெரிவித்த அமெரிக்கா!

(கொழும்பு)

ஜெனரல் பொன்சேகாவைக் கைது செய்தது மற்றும் அமெரிக்கா மீது கோத்தபாய மேற்கொண்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கடும் சீற்றமடைந்த அமெரிக்கா ,இலங்கைத் தூதுவரை அழைத்துத் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கையின் அண்மைய நடவடிக்கைகள் அமெரிக்காவைக் கடும் சீற்றமடைய வைத்துள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## எம்பிலிப்பிட்டியவில் ஒருவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய மொறப்பிட்டிய பகுதியில் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். நேற்றுக் காலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு காத்தான்குடி காட்டுப் பகுதியிலிருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் பொன்சேகாவை விட உயர்ந்த பதவிகளில் எவரும் இல்லை

### இராணுவப் பேச்சாளர் செவ்வி

(கொழும்பு)

இராணுவச் சட்டங்களின்படி ஒருவரைக் கைது செய்வதற்கு உயரதிகாரிகள் தேவையில்லை. அவ்வாறு தேவைப்பட்டால் பொன்சேகாவை யாரும் கைது செய்ய முடியாது. ஏனெனில் அவரை விட உயர்ந்த பதவி நிலையில் இராணுவத்தில் யாரும் இல்லை என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர்கொழும்பு வார ஏடு ஒன்றுக்கு வழங்கிய நேர் காணல் வருமாறு,

கேள்வி:- ஜெனரல் பொன்சேகாவைக் கைது செய்த அதிகாரி அவரைவிட பதவி நிலையில் குறைந்தவர். அவ்வாறு செய்வதற்கு சட்டத்தில் இடம் உள்ளதா?

பதில்:- இராணுவச் சட்டங்களின்படி ஒருவரைக் கைது செய்வதற்கு உயரதிகாரிகள் தேவையில்லை. (16 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஹிஸ்புல்லா பதவி விலகத் தீர்மானம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பதவி விலகத் தீர்மானித்துள்ளார்.

மாகாண சுகாதார அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்து பொதுத் தேர்தலில் போட்டியிட அவர் தீர்மானித்துள்ளார். இந்த மாதம் 26 ஆம் திகதி தமது இராஜினாமாக் கடிதத்தை கிழக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் பெரும்பான்மைப்பலத்தை அரசு பெறாது

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறப்போகும் பொதுத்தேர்தலில் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோ நாடாளுமன்றப்பெரும்பான்மைப் பலத்தையோ பெற்றுக்கொள்ள முடியாது என ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் (16 ஆம் பக்கம் பார்க்க)

# பொன்சேகாவுக்கு நடந்தது என்ன? மனம் திறக்கிறார் மனைவி அனோமா!

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்துக்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் குடும்பத்துக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்பாக ஜெனரல் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகின்றது.**



**உங்களுக்கும் ராஜபக்ஷகளுக்குமிடையில் என்னதான் நடந்தது தவறாக?**

என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நாங்கள் நல்ல நண்பர்களாயிருந்தோம். போர் முடிபடைந்த பின்னர் அதனை நான் சிறிது உணர்ந்தேன். சில இடங்களில் புரிந்துணர்வின்மை இருந்தது. போர் முடிபடைந்தவுடன் சில இடங்களில் சரியாக நடத்தப்படவில்லை. சரத் இராணுவ அதிகாரியாகத் தொடர்ந்திருக்கவே விரும்பினார்.

தலைமைப் பாதுகாப்பு அதிகாரியாக அவர் இருக்க விரும்பவில்லை. 'போர் வீரர்களின் நலன்கள் தொடர்பில் அவர் பணியாற்ற விரும்பினார். அவர்கள் அதற்கு அனுமதிக்கவில்லை. அவர் கோத்தபாயவைச் சந்தித்து தான் தொடர்ந்து இராணுவத் தளபதியாகவே இருக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

ஆனால் அவர்கள் அதற்கு அனுமதிக்கவில்லை. அது தான் பிரதான பிரச்சினையாக இருந்தது. அதற்கு அப்பாலும் ஏதேனும் பிரச்சினைகள் இருந்ததா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர் படைவீரர்கள் மரங்களில் கீழன்றி சொந்தமான வீடுகளில் வசிப்பதனை உறுதிப்படுத்த வேண்டும் என்று அவர் விரும்பினார்.

**அவர் தனது பதவியிலிருந்து கொண்டே சதி முயற்சியில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுவது உண்மையா?**

அவர் தனது சீருடையைக் களைந்த பின்னரே அரசியலுக்கு வந்தார். அவர் மிக நாகரிகமாவே அதனைச் செய்தார். அவர் நவம்பரில் ஓய்வு பெற்ற பின்னரே அரசியலுக்கு வந்தார். ஆனால் இப்போது அவரை இராணுவச்சட்டத்தின் கீழ் கைது செய்ததாகவும் விசாரிக்கப் போவதாகவும் அச்சுறுத்துகின்றனர்.

**அவர் ஒரு சதியில் சம்பந்தப்பட்டுள்ளார் என்று எப்போது நீங்கள் அறிந்து கொண்டீர்கள்?**

அவர் அவ்வாறான ஒன்றைச் செய்வதாக இருந்திருந்தால் எப்போதோ அதனைச் செய்திருக்க வேண்டும். பிரபாகரன் கொல்லப்பட்ட உடனே அதனைச் செய்வது அவருக்கு எளிதாக இருந்திருக்கும். அந்நேரம் சரத் தான் ஹீரோவாக இருந்தார். இவை எல்லாமே சோடிக்கப்பட்ட கதைகள். அவர் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு செயலாளருக்கும் தகுந்த மரியாதை அளித்து வந்தார். மற்றவர்களுக்கு அல்ல. அவர்களுக்கு அவர் பணிந்து செயற்பட்டார். நூறு வீதம் அவர் அவர்களை நம்பிச் செயற்பட்டார். பின்னாட்களில் அவர் அவநம்பிக்கையுற்றார்.

**அவரை எதிர்த்த ஊடகவியலாளர்களைத் தாக்கியது, படுகொலை செய்தது தொடர்பாக அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அப்படி எதுவும் நடைபெறவில்லை. அந்நேரம் (லசந்த படுகொலை செய்யப்பட்ட ஜனவரி 2009ல்) அவர் போரில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தார். வேறு விடயங்களில் ஈடுபட அவருக்கு நேரம் இருக்கவில்லை. நான் அதை உறுதிப்படுத்துகிறேன். அவர் அந்நேரம் இராணுவ நடவடிக்கைகளுள் மூழ்கி இருந்தார்.

அவர் எப்போதும் வரைபடங்களுள் மூழ்கி இருந்தார். நிலத்தில் வரைபடம் விரிக்கப்பட்டிருந்தது. அவர் நடக்கும் போதும் சாப்பிடும் போதும் அந்த வரைபடத்தை அவதானித்தபடியே இருப்பார்.

அந்நேரம் அவருடைய மூளையில் அந்த வரைபடத்தைத் தவிர வேறேதும் இருக்கவில்லை. போரில் ஈடுபட்டுக் கொண்டு அதே நேரம் சிவிலியன்களைக் கொல்ல சதி செய்ய எவராலும் முடியாது. அவரின் கீழ் பணியாற்றிய இளம் அதிகாரி ஒருவரைக் கைது செய்து வைத்துக் கொண்டு சரத்திற்கு எதிராக சாட்சியளிக் கும்படி அவரை வற்புறுத்தி வருகிறார்கள்.

இந்த அதிகாரிகள் எனது கணவருடன் இணைந்து போரின் போது சிறப்பாக பணியாற்றியவர்கள். சரத் மீதான கொலைக் குற்றச்சாட்டு பொய்யானது என நூறு வீதம் நான் உறுதியாகச் சொல்வேன்.

**இடம் பெயர்ந்த மக்களை உடனடியாக மீள்குடியமர்த்துவதற்கு முதலில் மறுப்புத் தெரிவித்த சரத் பொன்சேகா பின்னர் அரசியலில் குதித்தவுடன் உடனடியாக அவர்களை மீளக்குடியமர்த்த வேண்டும் என்று தலைகீழ் பல்டி அடித்ததைப் பற்றி என்ன சொல்வீர்கள்?**

வடக்கு கண்ணிவெடிகளால் நிரம்பியுள்ளது. அவர் நூறு வீதம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பின்னரே குடியமர்த்தப்பட வேண்டும் என விரும்பினார். அதற்கு அதிக காலம் எடுக்கும்.

அதனால்தான் அவர்களை முகாம்களிலேயே வைத்திருக்க வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார். இப்போதும் கூட அவர் சொல்வார் மிக அவசரப்பட்டு இடம் பெயர்ந்தோர் குடியேற்றப்படுவதாக.

இது குறித்து இப்போதும் அவர் கவலைப்படுகிறார். தேர்தல் காரணமான அவர்கள் அவசர அவசரமாகக் குடியேற்றப்படுகிறார்கள். உண்மையில் செய்ய வேண்டியது இப்படியல்ல.

**அவர் இப்போது எப்படி இருக்கிறார்?**

அவர் மிகுந்த மூளைசாலி. நூறு வீதம் அவர் திடமாக இருக்கிறார். அவர் திடமான மனோபலம் உள்ளவர். அவரிடமிருந்து அவருடைய மனோபலத்தை யாரும் பறித்துவிட முடியாது.

**அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறை நிலைமைகள் எப்படியிருக்கின்றன?**

புதிதாக மணமான இளம் அதிகாரிகளுக்கு கொடுக்கப்படும் ஒரு குடியிருப்பிலேயே அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர்கள் சொல்வதுபோல ஆடம்பரக்குடியிருப்பு அல்ல அது.

நான் ஒரு இராணுவத்தினரின் மனைவி என்ற வகையில் அது எனக்கு நன்றாகத் தெரியும். இரண்டு அறைகள் கொண்டது. ஏயர் கொண்டிசன் இல்லை. மின்விசிறி மட்டுமே உண்டு. பொதுவான கழிப்பறையுடன் கூடியது.

**அவர் என்ன சாப்பிடுவார்?**

சோறும் கறியும், தேங்காய்ச்சம்பலும். அவருக்கு பலாப்பழம் மிகவும் பிடிக்கும். மீன் கறி, கொழுப்பு குறைந்த பாலை நான் எடுத்துச் செல்வேன், அவர் மீதான படுகொலை முயற்சியில் அவர் தப்பிய பின்னர் சாதாரணமாக அவர் அருந்துவதில்லை.

இந்த இடத்தில் சிங்கப்பூருக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். அவருடைய உயிரைக் காப்பாற்றியதற்காக. இல்லாவிட்டால் இப்போது அவர் உயிருடன் இருந்திருக்க முடியாது. சிங்கப்பூர் பொது மருத்துவமனையில் ஒரு மாதகாலமாக அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. அவருடைய சுவாசப்பையில் ஒரு மோட்டார் குண்டின் துண்டு ஒன்று இருந்தது. இரண்டாவது சிறுநீரகத்திற்கு அருகில் இருந்தது. அவருடைய குடல் பாதிக்கப்பட்டிருந்தது.

**ராஜபக்ஷக்களுக்கும் உங்களுக்குமான மோதல் ஏதாவது வழியில் தற்காலிகமாக நிறுத்தப்பட வாய்ப்பிருக்கிறதா?**

அவர் நியாயமான வழியிலேயே வெளியில் வர விரும்புகிறார். சட்டம் சரியான பதிலை தரும். அவர் எந்தத் தவறான காரியத்திலும் ஈடுபடவில்லை.

அப்படி இருக்கையில் ஏன் ராஜபக்ஷக்களிடம் அவர் கெஞ்ச வேண்டும். நான் கூட அதற்கு ஒப்புக் கொள்ள மாட்டேன். உண்மை ஒரு நாள் வெளிவரும்.

**அவர் தமிழர்களை வெறுப்பவரா?**

எங்களுக்கு நிறைய தமிழ் நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்கு உணவு கூட தந்திருக்கிறார்கள். சிறுபராயத்தில் அம்பாறையில் இருக்கையில் அவருக்கு நிறைய முஸ்லிம் நண்பர்கள் இருந்தார்கள்.

எனது தகப்பனாருக்கு யாழ்ப்பாணத்தில் நிறைய தமிழ் நண்பர்கள் இருந்தார்கள். எங்களுடைய இளமைக்காலத்தில் கிறீன்லண்ட், சரஸ்வதி லொஜ்ட் போன்ற சைவ உணவகங்களிலேயே நாங்கள் சாப்பிட்டிருக்கிறோம். அப்போது நான் மாணவியாக இருந்தேன். சரத் சிங்க றெஜிமெண்ட்டில் லெப்டினன்ட்டாக இருந்தார்.


**சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டவுடன் நீங்கள் சிராந்தி ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் பேசினீர்களாமே, அது உண்மையா?**

ஆம். நாங்கள் நல்ல நண்பர்களாக இருந்தோம். நான் தொலைபேசியில் அழைத்த நேரம் அவர் மொஸ்கோவில் இருந்தார். இரண்டு மணி நேரத்தால் அவர் மீண்டும் என்னுடன் தொலைபேசியில் பேசினார். சரத் கைது செய்யப்படவில்லை.

அவர் இழுத்துச் செல்லப்பட்டார் என்று நான் அவருக்கு விளக்கினேன். ஒரு மிருகத்தைப் போல அவரை தூக்கி எறிந்தார்கள் என்று நான் சொன்னேன்.

தான் இது தொடர்பாக ஏதாவது செய்வதாக அவர் சொன்னார். அவர் செய்திருப்பார் என நான் நினைக்கிறேன். பெண்கள் என்ற வகையில் எங்களுக்குள் இன்னமும் தொடர்புகள் உண்டு. நாங்கள் மனைவியராகவும், தாய்மாராகவும் இருக்கிறோம். என்னுடைய நன்றியை அவருக்கு நான் தெரியப்படுத்துகிறேன்.

## பேசும் படம்



காதலாகி...

## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 60 சிங்கள தாதிமார் நியமனம்

### 6 பேர் பதவியை பொறுப்பேற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 60 சிங்கள தாதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 6பேர் நேற்று முன்தினம் தமது பதவியை பொறுப்பேற்றுள்ளனர். ஏனையவர்கள் விரைவில் பொறுப்பேற்பர் என தெரிவிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் தாதிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக இவர்கள் தென்னிலங்கையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் யாழ்.குடாநாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் தாதிகள் பற்றாக் குறை இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

## யாழ்.கல்வி வலயத்தில் ஒன்றுகூடவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்துக்குற்பட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், அனைவரையும் இன்று காலை 9 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் ஒன்றுகூடுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

## படுகாயமடைந்த பெண் மரணம்

காஸ்சிலிண்டர் வெடித்ததில் படுகாயமடைந்த பெண் கொழும்பு நவலோகா வைத்திய சாலை யில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்தார். கடந்த 10ஆம் திகதி பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கையில் காஸ்சிலிண்டர் வெடித்ததில் செல்வி. சாவித்திரி வினாசித்தம்பி (வயது 65) என்பவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு நவலோகா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர் நேற்று மரணமானார். (ச-5,246)

# இன்று ஒரு தகவல்

## சமத்துவப் பார்வை

இல்லாமிய ஆட்சியாளர் கலீபா உமர் அவர்கள் ஒரு தடவை பாலஸ்தீனம் போக வேண்டியிருந்தது.

அவருடன் அருடைய பணியாளர் ஒருவரும் புறப்பட்டார்.

ஆனால் அங்கே இருந்தது ஒரே ஒட்டகம்தான்.

"அதனால் என்ன... இரண்டு பேரும் அதன் முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டு போக வேண்டியது தானே?" என்று நாம் நினைப்போம்.

ஆனால் அந்த ஆட்சியாளர் அப்படி நினைக்கவில்லை. அவர் வேறு விதமாக சிந்தித்தார். பணியாளரைப் பார்த்துச் சொன்னார்,

"நம்மிடம் இருக்கிறது ஒரே ஒட்டகம்தான்... நான் மட்டும் ஒட்டக்த்தில் ஏறி உட்கார்ந்து கொண்டு வந்தால் நான் உனக்குக் கொடுமை செய்வதாக ஆகும்.

நீ ஒட்டகத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டு வர நான் நடந்து வந்தால் நீ எனக்கு கொடுமை செய்ததாக ஆகிவிடும். சரி... நாமிருவரும் இந்த ஒட்டகத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு வந்தால்... ஒரு வாயில்லாப் பிராணிக்கு நாமிருவருமே கொடுமை செய்வதாக ஆகும்.

அதனால் இப்பொழுது நாம் என்ன செய்யலாம் என்றால்...

கொஞ்சத்தூரம் நான் உட்கார்ந்து கொண்டு வருகிறேன். அதன் பின் கொஞ்சத்தூரம் நீ உட்கார்ந்து கொண்டுவா.

அதன்பின் கொஞ்சத்தூரம் இரண்டு பேரும் நடந்து போவோம்" என்றார்.

ஒரு வேலைக்காரனையும் ஒருவாயில்லாப் பிராணியையும் தன்னைப் போலவே பாவித்தார் அந்த ஆட்சியாளர்.

அவர் சொன்ன ஒப்பந்தப்படியே மாறி மாறி பயணம் செய்து பாலஸ்தீனத்துக்குப் போய்ச் சேர்ந்தார்களாம்.

பாலஸ்தீனத்திற்குள் ஒட்டகம் நுழைகிறது. முறைப்படி அந்தச் சமயம் அந்தப் பணியாளர் ஒட்டகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறார்.

கலீபா உமர் அவர்கள் ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்தபடியே நடந்து வருகிறார்.

அந்தக் காட்சியை அங்கேயிருந்த மக்கள் எல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டார்களாம்.

கலீபாக்கள் தங்களிடம் வேலை செய்யும் பணியாளர் களைக்கூட கண்ணியமாக நடத்தினார்கள் என்பது வரலாறு.

நபிகள் நாயகம் அவர்களிடம் அனஸ் (ரன்) என்பவர் பத்து ஆண்டுகள் பணியாளராக இருந்தார்.

அவர் சொல்கிறார்:

"நான் பத்து வருடகாலமாக பெருமானாரிடம் பணியாளராக இருந்திருக்கின்றேன்.

இந்தப் பத்து வருடத்தில் ஒரு தடவைகூட அவர் கடிந்து ஒரு வார்த்தை சொன்னதில்லை" என்றார்.

அது மட்டுமல்ல...

அவர் பத்து ஆண்டுகள் நபிகளின் பக்கத்தில் இருக்கக் கூடிய வாய்ப்பு இருந்ததனால் அவர் எந்த சூழ்நிலையில் எப்படியெல்லாம் நடந்து கொள்வார் என்பதை நேரில் கண்டவர்.

அதில் பல நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்.

நபிகள் நாயகம் யாரையாவது சந்திக்கிறார் என்றால்... அவர் தான் முதலில் 'சலாம்' சொல்வாராம். சந்திக்கிறவர்கள் சிறியவரா– பெரியவரா, ஏழையா – பணக்காரரா... எவராக இருந்தாலும் இவரே சலாம் சொல்ல முந்திக் கொள்வாராம்.

பெருமானாரின் கைகளை யாராவது பிடித்தால் பிடித்தவர் தமது கரங்களை விலக்கிக் கொள்வதற்கு முன்னர் இவர் தனது கரங்களை விடுவித்துக் கொள்ளமாட்டார்.

யாராவது பெருமானாரின் காதில் இரகசியம் கூறினால் கூறி முடிக்கும் வரை காதைத் தாழ்த்திக் கேட்பார். கூறிமுடிக்கு முன் தன் காதை விலக்கிக் கொள்ளமாட்டார்.

பெருமானாரோடு யாராவது பேசினால் பேசுபவர் தமது முகத்தைத் திருப்புவதற்கு முன் இவர் தமது முகத்தைத் திருப்பிக் கொள்ளமாட்டார்.

தம்மோடு ஒருவர் பேசுகிறார் என்றால் அப்படிப் பேசுபவரின் குரலின் அளவுக்கு மேல் தமது குரலை உயர்த்திப் பேசவோ இடைமறித்துப் பேசவோ மாட்டார்.

இவை நபிகள் நாயகம் அவர்களுடனேயே இருந்து அவரை கூர்மையாகக் கவனித்த அனஸ் அவர்கள் தரும் பழகுமுறைப் பண்பாடுகள்.

மனிதர்களை ஒரே தட்டில் நிறுத்திப் பார்க்கும் சமத்துவப் பார்வை இது.

இந்தப் பார்வைதான் இஸ்லாமிய ஆட்சித் தலைவர் களிடமும் இருந்தது.

சக மனிதர்களைச் சமமாகப் பார்க்கும் இந்தப் பண்பாடு இன்றைய மனிதர்களுக்கு மிகவும் தேவைப்படுகின்ற ஒன்று.

இந்தப் பண்பாடு வளருமானால் மனித வாழ்க்கை மாண் புடையதாக அமையும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

### அபிவிருத்தி, புனர்வாழ்வு வேலைகளுக்காக

# கிளிநொச்சி அக்கராயன் பகுதிகளிலுள்ள வீடுகள் உடைக்கப்பட்டு வருவதாக தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள பொதுமக்களின் வீடுகளை அந்தப் பிரதேசத்தில் புதிய அபிவிருத்தி வேலைகளைச் செய்யும் கட்டிட ஒப்பந்தக்காரர்கள் உடைத்து வருவதாகவும் இந்த வீடுகளை உடைத்து எடுக்கப்படும் சீமெந்துக் கல், கூரைக்கான மரம், ஓடுகள், கூரைத்தகடுகள் என்பவற்றை வைத்தே அவர்கள் அபிவிருத்தி வேலைகளை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வெளியிடங்களிலிருந்து வந்துள்ள ஒப்பந்தக்காரர்களே இந்தப் பிரதேசங்களில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு வேலைகளைச் செய்து வருகின்றனர் என அப்பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதுவரையில் இப்படி பத்துப் பேரின் வீடுகள் ஸ்கந்தபுரம் பகுதியில் மட்டும் உடைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்கந்தபுரம் கிராம சேவை அலுவலர் மகேந்திரன், அக்கராயன் மருத்துவமனை மருத்துவர் கோபாலபிள்ளை உள்ளிட்ட எட்டுப் பேரின் வீடுகள் இவ்வாறு உடைக்கப்பட்டிருப்பதாகவும் அபிவிருத்தி, புனர்வாழ்வு என்ற பேரில் இப்போது இந்த முறைகேடுகள் குறித்து இதுவரையில் யாரும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது. (2-6)

### புலமைப் பரிசில்

## பயிற்சிப் பரீட்சைகளை நடத்தக் கோரிக்கை

தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளில் தரம் – 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி பயிற்சிப் பரீட்சைகள் நடத்த அனுசரணை வழங்கி வந்த யேசு அகதிகள் பணி நிறுவனத்தின் அனுசரணை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களாக வழங்கி வந்த அனுசரணைப் பணியினால் இப்பிரதேச மாணவர்கள் மாவட்ட ரீதியில் உயர் நிலையை அடையக்கூடியதாக இருந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் இடம்பெயர்ந்து தென்மராட்சியில் தங்கியுள்ளவர்களில் ஆரம்பக் கல்வி மாணவர்கள் 4 ஆயிரம் பேருடன் நிரந்தர பிரதேச மாணவர்களும் இப்பயிற்சி பரீட்சை இன்மையால் பெரும் பாதிப் படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-6-29)

### அடுத்த வருடம் முதல்

# உயர்தர மாணவர்கள் 80 சதவீத வரவை உறுதிப்படுத்தல் அவசியமானது

(யாழ்ப்பாணம்)

அடுத்த வருடம் முதல் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 80 சதவீத வரவை உறுதிப்படுத்த வேண்டியது அத்தியாவசியமானது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய பாடவிதான பரிந்துரைக்கமைய அடுத்த வருடம் பாடசாலை விண்ணப்பதாரிகள் மட்டும் தோற்றுகின்றனர் என்றும் பழைய பாடவிதானங்களுக்கேற்ப பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

# தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் கல்வி வளாகத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (IIT) யாழ் கிளை வைபவ ரீதியாக இன்று திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள சென். மாட்டீன் கட்டிடத் தொகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் பணிப்பாளர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளதுடன் கணனிப் பிரிவின் பீடாதிபதி பேராசிரியர் அல்பிரட் பெரேரா, கணினி விரிவுரையாளர் துசிதா கல்பகே, நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் நீல் செனவிரத்தின, யாழ். கிளையின் கல்வி இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் ஆகியோர் உரையாற்றவுள்ளார்கள்.

மதத் தலைவர்கள், கல்வியாளர்கள், சமூகத் தலைவர்கள் ஆகியோரின ஆசி உரைகளும் இடம்பெறும்.

ஆர்வலர்கள் வருகை தந்து நிகழ்ச்சியைச் சிறப்பிக்கும்படி விழாக் குழுவினர் அழைக்கின்றனர். (6)

# இராசி பலன்

15-02-2010
(மாசி 3, திங்கட்கிழமை)
பிரதமை முற்பகல் 10.33 மணி வரை
சதயம் முன்னிரவு 9.39 மணி வரை
இராகுகாலம் 8.03-9.33 மணி வரை
சுபநேரம் - 12.33-2.03 மணி வரை

| | |
|---|---|
| மேடம் | நல்ல வரவேற்பு, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, போசன நன்மை. |
| இடபம் | அதிகாரம், செய்தொழில் விருத்தி, ஆரோக்கிய நிலை, தன்னம்பிக்கை. |
| மிதுனம் | ஆன்றோர் சந்திப்பு, கடின முயற்சி, தேவையற்ற பயம், திடீர் பயணம். |
| கடகம் | எதிர்பாராத பகை, காரியதடங்கல், ஆரோக்கியக்குறைவு, போசன சுகம். |
| சிங்கம் | களஸ்திர நன்மை, பிரயாண நன்மை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும். |
| கன்னி | உற்சாகம், சத்துரு ஜெயம், செய்தொழில் முன்னேற்றம், விருந்துபசாரம். |
| துலாம் | தாழ்ந்த சுபாவம், வியாபார விருத்தி, பூர்வ புண்ணிய கருமம், தனவிரயம். |
| விருச்சிகம் | பயந்த சுபாவம், தொழில் ஆர்வம், சுபசெய்தி, போசன சுகம். |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, விருந்துபசாரம், இனிய சம்பவம். |
| மகரம் | வீண் விவாதம், பண விரயம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு. |
| கும்பம் | நண்பர்கள் சந்திப்பு, தெய்வ சிந்தை, பொருள் சேர்க்கை, உஷ்ண நிலை. |
| மீனம் | பிதாசிந்தை, காரிய தாமதம், சுபசெலவு, மனச்சஞ்சலம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 40 | 50 | 50 |
| ப்ச்சைமிளகாய் | 120 | 140 | 120 |
| தக்காளி | 120 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 40 |
| கோவா | 60 | 70 | 60 |
| கரட் | 100 | 120 | 100 |
| பூசணி | 25 | 35 | 30 |
| புடோல் | 70 | -- | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 100 | 110 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 30 |
| பயிற்றங்காய் | 140 | 150 | 120 |
| லீக்ஸ் | 100 | 110 | 80 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 170 | 180 | 120 |
| முருங்கைக்காய் | -- | -- | 600 |
| போஞ்சி | 100 | 120 | 120 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 40 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |
| இரசவள்ளிக்கிழங்கு | 100 | 120 | -- |



யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி த.சு.துரைசிங்கம் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் பா.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினராக நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜாவும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வைப் படங்களில் காணலாம்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வட்டு கார்த்திகேய வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக வட்டு தெற்கு J/165 கிராம உத்தியோகத்தர் செ.சிவபாலன், ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் வலி மேற்கு பிரதேச அமைப்பாளர் வே.மகேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற கடற்படை உத்தியோகத்தர் கலக் விசுவநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (6-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் வெ. இராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு பிரதம விருந்தினராகவும், சமாதான நீதிவான் எஸ்.ஐங்கரன், சங்கரத்தை கிராம உத்தியோகத்தர் எஸ். சிவகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-49)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் (இசுறுபாடசாலை) வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி அதிபர் ஏ.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா மற்றும் திருமதி மனோரஞ்சனி நடராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)

## இலகுவேலைத்திட்ட உலருணவு வழங்கப்படவில்லை

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு பகுதியின் சில கிராம அலுவலர் பிரிவுகளுக்கு கடந்த வருட கார்த்திகை, மார்கழி மாதங்களுக்கான இலகு வேலைத் திட்டத்திற்குரிய உலர் உணவுகள் இன்னும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பிரிவுகளுக்கு பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருப்பினும் தமக்குரிய உலர் உணவுகள் வழங்கப்படாமை குறித்து அப்பகுதியின் இலகு வேலைத்திட்ட பயனாளிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இருப்பினும் இம் மாதத்திற்குரிய வேலைகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருவதனால் பொருட்களை தாமதமின்றி தந்துதவுமாறும் அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (2-36)

## கருத்தரங்கு

(சாவகச்சேரி)

பங்குச்சந்தை பற்றிய கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கும் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 2 மணிவரையும் தரம் 10-11 மாணவர்களுக்கும் நடைபெறவுள்ளதென வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (2-29)

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக 2010/ 2011 புதிய கல்வியாண்டிற்கான எந்திர பொறியியல் கற்கைநெறிக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக இணைப்பாளர் அறிவித்துள்ளார். (2-30)

## இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மாசிமாத இலட்சார்ச்சனை எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

தினமும் காலை 9 மணிக்கு அபிஷேக பூஜை இடம்பெற்று முற்பகல் 11 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம்பெறும் எனவும் அத்துடன் மாலை 3.30 மணிக்கு பூஜை ஆரம்பமாகி 4 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை இடம்பெறும் எனவும் தேவஸ்தான பிரதமகுரு ஸ்ரீ விஷ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ் கந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெற்று மாலை 4மணிக்கு மஹாலட்சுமிக்கு விசேட பூஜை, தீபபூஜை, உற்சவம் என்பனவும் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6-49)




## ஒருங்கிணைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச மட்ட டெங்குநோய்க் கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம்திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

2ஆவது தடவையாக நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமை வகிக்கவுள்ளதாக பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (2-30)

## கடந்த 30 வருடங்களாக புனரமைக்கப்படாதுள்ள வீதி

(பொன்னாலை)

அராலி தெற்கு -பூநாவோடை இந்து மயானத்துக்குச் செல்லும் வீதி கடந்த 30 வருடங்காளக புனரமைக்கப்படாமல் இருந்து வருகின்றது.

குன்றும் குழிகளும் நிறைந்த மேற்படி வீதியால் போக்குவரத்துச் செய்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த இந்து மயானத்தை அண்டியதாக நெல்வயல்கள் இருப்பதால் இவ்வீதியை விவசாயிகளும் பிரதான வீதிகளில் ஒன்றாகப் பயன்படுத்தி வரும் அதேநேரம் கடற்றொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் சடலங்களை தகனஞ் செய்யச் செல்வோர் என தினமும் நூற்றுக் கணக்கானோர் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே, இவ் வீதியின் முக்கியத்துவம் உணர்ந்து விரைவில் புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (6-49)

## சஞ்சிகைகளுக்கான ஆக்கங்கோரல்

(கொழும்பு)

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொதுநூலகத்தினால் வெளியிடப்படவுள்ள கொக்கூர்சுட்டி பாகம் -II சஞ்சிகைக்கு பாடசாலை மாணவர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு கவிதை, கட்டுரை, விடுகதை, சிறுகதை, பழமொழி, நகைச்சுவை எதுவாயினும் தமிழ் மற்றும் ஆங்கிலமொழியிலும் அனுப்பமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுடைய ஆக்கங்களை தாங்கி வரும் இச் சஞ்சிகைக்கு 15 வயதிற்குட்பட்ட மாணவர்களிடமிருந்து ஆக்கங்களை பெறுவதற்காக நூலக சமூகத்தினர் இன்று முதல் இப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதற்கான ஆக்கங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பொதுநூலகம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம் என நூலகத்தினர் தெரிவித்துள்ளனர். (6-30)

## கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் சண்டிலிப்பாயில் 51 வீடுகள் நிர்மாணிப்பு



(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் 51 நிரந்தர வீடுகளை கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் 40.8 மில்லியன் நிதிச் செலவில் நிர்மாணித்து கொடுக்கவுள்ளது.

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் போரினால் பாதிப்படைந்த மற்றும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 51 குடும்பங்களிற்கு 8 இலட்சம் ரூபாய் பெறுமதிமிக்க நிரந்தர வீடுகள் மலசலகூட வசதியுடன் கட்டிக்கொடுக்கவுள்ளது. இக் கட்டடப் பணிகள் நிறைவடைந்த நிலையில் மிக விரைவில் பயனாளிகளுக்கு கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## நல்லூர் பிரதேச செயலகத்தின் மகளிர் தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தின் மகளிர் தினப் போட்டி நிகழ்வுகள் பல்வேறு இடங்களில் இடம்பெறவுள்ளன.

இதில் கோலமிடுதல் போட்டி எதிர்வரும் 15 ஆம்திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்திலும் கழிவுப் பொருள் ஆக்கம் 16ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு வண்ணார்பண்ணை புதுவீதியில் அமைந்துள்ள தையல் பயிற்சி நிலையத்திலும் கண்காட்சி அலங்காரம் மற்றும் கயிறு இழுத்தல் போன்ற நிகழ்வுகள் 22 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் தேங்காய் உரித்தல் 23 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு அரியாலை திருமகள் சனசமூக நிலையத்திலும் பொது அறிவுப் போட்டி மார்ச் மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

அத்துடன் மெதுவான சைக்கிள் ஓட்டம், வேகநடை, பலூன் உடைத்தல், கரண்டியால் போத்தலில் நீர் நிரப்புதல் போன்ற விளையாட்டு நிகழ்வுகள் மார்ச் மாதம் 2 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் தொடர்பான நிபந்தனைகளை அறிய விரும்பும் போட்டியாளர்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளும் படியும் போட்டியின் போது உரிய நேரத்திற்கு போட்டிக்குரிய ஆயத்தங்களுடன் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (6-30)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 07

இவற்றுள்ளே திருமலையின் கீழ்ப் புதினம்,திருக்குளத்து கட்டினது, கழனி மலை திருச்சூகர வேட்டைத்தூது ஆகிய நான்கு தலைப்புக்களில் கீழே காணப் படும் விபரங்கள் பெரும்பான்மையும் பௌ ராணிக பாணியிலான புனைகதைகளா கும். ஏனைய யாவும் சமுதாய வழமை களையும் ஆலயம் தொடர்பான ஏற்பாடு களை விபரிக்கும் ஆவணங்களைக் அடிப்படையாகக் கொண்ட மரபுகளையும் ஆதாரமாகக் கொண்டவை.

1. அரசர்கள் கோணேசர் கோயிலுக்கு வழங்கிய நன்கொடைகள்.
2. கோயிற்சேவைகள் பற்றிய ஏற்பாடு கள் .
3. கோயிலுக்குரிய உடைமைகள்
4. குடியேற்றம்
5. சமுதாய வழமைகள்.
6. வன்னிபங்கள் ஆகிய 6 பிரதான விடயங்களை பற்றியனவாகவே 23 தலைப் புகளின் கீழே காணப்படும் விபரங்கள் அமைந்துள்ளன. செய்யுள் நடையில் உள்ள பகுதியிற்சொல்லப்பெற்ற சில அம் சங்களும் அதிலே இடம்பெறாத பல அம் சங்களும் உரை நடையில் உள்ள பகுதி யிலே சற்று விரிவாக கூறப்பட்டுள்ளமை கவனித்தற்குரியது. ஆதலால் ஒரு வரலாறு மூலம் என்கின்ற வகையில் உரை நடைப்பகுதியே கூடிய முக்கியத் துவம் வாய்ந்ததாகும்.

கோணேசர் கல்வெட்டின் இரு பகுதிக ளும் ஒரே காலத்தவையா? அவை ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவையா? என் னும் வினாக்களுக்கு விடை காண்பது அவசியமாகின்றது. அதன் பாயிரச்செய்யுள் கூறுவனவற்றை ஆதாரமாகக் கொண்டே இவ் வையப்பாடுகளை ஓரளவுக்குத் தெளிவு படுத்திக்கொள்ளலாம்.

..... குளக்கோட்டு மன்னன் சொற்படி சொல்லைவே கல்வெட்டுப்பாடென்ன பாடினன்.... கவிராச வரோதயனே எனும் தொடரின் மூலம் கவிராச வரோ தயன் இயற்றிய நூல் செய்யுள் வடிவில் அமைந் தது என்பது பெறப்படுகின்றது. எனவே உரை நடையில் அமைந்த பகுதி கவிராச வரோதயனால் இயற்றப்பெற வில்லை என்பதும் உணரப்படுகிறது.

மேலும் குளக்கோட்ட மன்னன் சொற் படி பாடினன் என்ற குறிப்பானது குளக்கோட்டன் திருப்பணிகளைப் பற்றிய பாடற் பகுதியே கவிராச வரோதயன் இயற்றிய பனுவல் ஆகும் என்ற கருத்தும் பொருத்தமானதாகத் தோன்றும். கவிராச வரோதயன் பாடிய கல்வெட்டு எவ்வண் ணமாகவும் யாராலும் விரிவுபடுத்தப் பெற்றது என்பது ஆய்வுக்குரியது.

காலப்போக்கிலே கயவாகு ராசன் பற் றிய அகவற் பாவில் அமைந்த பாடலும் இரண்டாம் பகுதியான உரை நடைப்பகுதி யும் அதனோடு இணைக்கப்பட்டதும் அது ஒரு தொகுப்பு நூலாகியது. அகவற் பாடலாக உள்ளபகுதி, உரை நடைப்பகுதி ஆகியவற்றை ஆக்கியோரின் பெயர்களை யும் இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து தொகுத்தோரின் பெயரினையும் அறியுமாறில்லை. உரை நடைப்பகுதி பாடற்பகுதிகளுக்கு காலத்தால் பிற்பட்டது என்று உறுதிப்படுத்துவதற்கும் தக்க காரணங்கள் இல்லை.

அப்பொழுது வன்னிபமும் மற்று முள்ள யாவரும் பேசிக்கொண்டு இத் திருமலையிற் பெருமைப்பாடும். இத னுள்ள புதுமைகளும் எங்கோமானா கிய குளக்கோட்டு மகாராஜா நிறுத் திய திட்டங்களும் கேட்டறிய வேண் டும் என்று செண்பகராஜரையும், பெரிய பிள்ளை பண்டாரத்தையும், ஐந்து குடிமைகளையும் கூட்டி விட்டு , நீங் கள் நிலாவெளி என்னும் ஊருக் குப் போய் கனகசுந்தரப்பெருமாளுக்கு சொல் லும் வசனம்:

தம்மிடத்திலே மகாபெரும் புதின மான சில பெருமைகள் கேட்க வேண் டும் என்று பெரிய கணக்கும் ,வழமைப் பத்ததியும்,கல் வெட்டுப்பத்ததியும் எடுப் பித்துக்கொண்டு நாங்கள் வரச் சொன் னோம் என்று கூட்டிக்கொண்டு வாருங் கள் என்று சொல்ல அவர்கள் சென்று

## கோணேசர் கல்வெட்டு சில ஆராய்ச்சிக்குறிப்புகள்

ஒரு தொகுப்பு நூலாக அமைந்திருக் கும் கோணேசர் கல்வெட்டில் காணப்படும் பிரதான விடயங்கள் எல்லாவற்றையும் விரிவாக விமர்சித்து ஆராயப்புகின், அது பரந்து பெருநூலாக விரியும். அத்தகைய முயற்சியானது எட்டு நூற்றாண்டுகளுக் குரிய திருகோணமலை பிராந்திய வர லாறு பற்றிய ஆராய்ச்சியாக மலரும். இவ் வுரையிலே, சமயத்திற்கு ஏற்றவாறு, நூலின் பண்பினை பிரதிபலிக்கத்தக்க வகையில் சில பிரதான விடயங்களை மட்டுமே தெளிவுபடுத்த முடியும்.

குளக்கோட்டன், கயவாகு ராசன் என் போரைப்பற்றி வேறு ஒரு நூலிலே விரி வாக விளக்கவேண்டும் என்பதால் அவர்களைப் பற்றிய விசாரங்களும் இங்கு தவிர்க்கப்படுகின்றன.

6. ஆவது கோணேசர் கோயிலுக் குரிய உடைமைகள்

திரவிய இரும்பு,சிங்காசனத்துக்கரு கான திரவியம் ஆகிய தலைப்புக்களைக் கொண்ட பகுதிகளிலே கோயில் வைக்கப் பட்டிருந்த திரவியங்களும் பிற பொருள்க ளும் வர்ணிக்கப்படுகின்றன. இவற்றுள் முதலாவது தலைப்பில் உள்ள பிரிவிலே கீழ் வரும் பகுதி காணப்படுகிறது;

கூட்டிவர வன்னிபமும் இரு பாகை முதன்மையும் தவிர மற்றும் உள்ள யாவரும் எதிர்கொண்டு இறைஞ்சி ,வன் னிபத்துச் சரியான வரிசையுடனே இருத்தி ,ஆதியாகிய கோணநாயகர் கிரு பையையும் குளக்கோட்டு ராசாவுடைய பெருமையையும் பேசிக்கொண்டிருக்கும் போது தனியுண்ணாப் பூபால வன்னிப மும் இரு பாகை முதன்மையும் கனக சுந்தரப் பெருமாளை கேட்ட வசனம்:

வரராமதேவர் முதலிய எட்டு ராசாக் கள், அறை முதலில் வைத்த இரும்பு எம் மாத்திரம் என்றும் நகைகள் எம்மாத்திரம் என்றும் ஒரு திட்டம் பார்க்க வேண்டும் என்று கேட்ப ; கனகசுந்தரப்பெருமாள் பத்ததியைப்பார்த்து சொல்லியது:

1. வரராமதேவர் அறை முதலில் வைத்த பொன் 689 களஞ்சு ; பொன் னகை 634 களஞ்சு .

2. குளக்கோட்டு மகாராசா அறை முதலில் வைத்த பொன் 8481 களஞ்சு; பொன்னகை 9512 களஞ்சு.

3. கயபாகு மகாராசா அறை முதலில் வைத்த பொன் 1522 களஞ்சு; பொன் னகை 249களஞ்சு.

4. புவனேக கயபாகு அறை முதலில் வைத்த பொன் 9284 களஞ்சு; பொன் னகை 3926 களஞ்சு.

5. நளச்சக்கரவர்த்தி அறை முதலில் வைத்த பொன் 89211 களஞ்சு; பொன் னகை 2948களஞ்சு.

6. பரராச சேகரன்,செகராசசேகரன் அறை முதலில் இருப்பாக வைத்த பொன் 729 களஞ்சு ; பொன்னகை 781 களஞ்சு.

7. ஆரியராசன் அறை முதலில் இருப் பாக வைத்த பொன் 219 களஞ்சு ;பொன் னகை 1209 களஞ்சு.

8. நாட்டவர்கள் கோயிற்படியில் வைத்து கும்பிட்ட பொன் 219 களஞ்சு. இம் மாத் திரமும் குகைக்குள்ளே பண்டக சாலை யில் பெரிய முதல் இருப்பு. இதற்கு வகை பிற கணக்கில் உண்டு.

இதிலே கூறப்பெற்ற விடயங்கள் முதற் காலத்துச் சரித்திர நிகழ்ச்சி பற்றியன வாக காணப்படுகின்றன. ஒரு சமயத்திலே கோயிலின் பரிபாலனத்திற்கு பொறுப்பாக இருந்த இரு பாகை முதன்மையான தலை மைக்குருக்களுக்கும் திருகோணமலை வன்னிபமான தனியுண்ணாப் பூபாலனும் கோயிலின் இருப்பாகவுள்ள பொற்காசு , பொன்னகை ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்கு என ஒரு கூட்டம் கூட்டி னார்கள். அதற்கு கனகசுந்தர பெரு மாளை அழைக்க வேண்டியிருந்தது. பெரிய கணக்கு , வளமைப்பத்ததி , கல் வெட்டுப் பத்ததியாகிய ஆவணங்கள் அவரின் பொறுப்பாகவே இருந்தன.

பேராசிரியர்
சி.பத்மநாதன்


எனவே உரிய மரியாதைகளுடன் அவரை அழைத்துவருவதற்காக செண்ப கராஜர் , பெரிய பிள்ளை பண்டாரமாகிய இருவரையும் ஐந்து குடிமைகளோடும் நிலாவெளிக்கு அனுப்பியிருந்தார்கள்.

கனகசுந்தரப் பெருமாள் கோயிலை அடைந்ததும் அங்கு சமுகமாய் இருந்த வர்கள் அவரை வரவழைத்து , வன்னிபத் துக்கு சமனான வரிசைகளோடு இருத்தி னார்கள். அதன் பின்பு வன்னிபமும் இரு பாகை முதன்மையும் முற்காலத்து மன் னர்கள் கோயிலுக்கு கொடுத்த பொற்காசு , பொன்னகை ஆகியன பற்றி விசாரித்த போது கனகசுந்தரப் பெருமாள் அவற்றைப்பற் றிய விபரங்களை பத்ததியைப்பார்த்துச் சொன் னார். (தொடரும்)

## தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பங்களின் கால எல்லை அறிவிக்கப்பட்டுள்ளது

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தபால் மூலம் மேற்கொள்ளப்படும் வாக்களிப்பிற் கான விண்ணப்பங்களை நாளை தொடக் கம் 22 ஆம் திகதி வரையிலும் மக்கள் மேற் கொள்ள முடியும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள் ளதாவது,



இலங்கையின் 7ஆவது நாடாளு மன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி நடை பெறவுள்ளது. 2008ஆம் ஆண்டு மேற் கொள்ளப் பட்ட வாக்காளர் பதி வுகளின் அடிப்ப டையில் பொதுத் தேர்தல் நடத்தப் படும். அதனையே அண்மையில் நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் பயன்படுத் தியிருந்தோம். இந்த வாக்காளர் பதிவுகள் 22 மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட செயலகங் களில் பார்வைக்கு வைக்கப்படும். தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பம் செய்பவர்கள் தமது முழு விபரங்களையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

அத்துடன் பொதுத் தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்கள் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்ப மாகி 26ஆம் திகதி மதியம் 12 மணியுடன் நிறைவுபெறும்.சுயேட்சை வேட்பாளர்கள் எதிர் வரும்25ஆம்திகதி12மணிக்குமுன்னர் 2ஆயிரம் ரூபாய்களை செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## இளம் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது

மட்டக்களப்பு, நாவலடி வீதியில் பெண் ஒருவரின் சடலம் சனிக்கிழமை மாலை கண் டெடுக்கப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் தோப்பூர் பட்டித்திடலைச் சேர்ந்த 29 வயதுடைய (செல்வராசா) எஸ். திலகவதி என கைப்பையில் இருந்த தேசிய அடையாள அட்டைமூலம் அடையாளங் காணப்பட்டுள்ளது.இது கொலையா அல்லது தற்கொலையா என்பது குறித்து உடனடியாக உறுதிப்படுத்தப்படவில்லை.

சடலத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிள் தலைக்கவசம் மற்றும் கைப்பையும் காணப் பட்டுள்ளது. சடலம் கண்டுபிடிக்கப்பட்டதை யடுத்து அந்தப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (2-6)

## சரத்பொன்சேகாவின் ஆதரவாளரான படை வீரர் மீது தாக்குதல்

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கிய, போரில் தமது கால்களை இழந்த படைவீரர் ஒருவர் நேற்று முன்தினம் தாக்குதலுக்கு உள்ளா கியுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு முன்னர் அவர், கடத்திச் செல்லப்பட்டதாக ஜே.வி.பி தெரிவித் துள்ளது.இந்தச் சம்பவம் கொழும்பின் புறநகர் ராகமையில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளி இரவு முதல் காணாமல் போயிருந்த அவர் பின்னர் பலமாகத் தாக் கப்பட்ட நிலையில், வீதியோரத்தில் கிடத்தப்பட் டிருந்தார்.இந்தப் படைவீரர் 1990 ஆண்டின் ஜெய சிக்குறு படை நடவடிக்கையின் போது காய மடைந்தார்.

மேலும் சரத்பொன்சேகா கைதுசெய்யப் பட்டதன் பின்னர் அவரின் ஆதரவாளர்கள் நாடளாவிய ரீதியில் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## கடற்படையால் அழைத்துச் செல்லப்பட்டோர் காணாமல் போயுள்ளனர் – உறவினர்கள் தகவல்

மன்னாரில் காணாமல் போனவர்களில்அதிக எண் ணிக்கையானோர் கடற்படையினரால் விசாரணைக்கென அழைத்துச்செல்லப்பட்டவர் களே என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

அங்கு காணாமல் போனவர்கள் தொடர் பான விபரங்களைத் திரட்டும் நிகழ்வொன்று கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதனை வவுனியா வன்முறையற்ற சமா தான அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இதன் போது வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளர் ரோகிதவும் வருகை தந்து மக்களுடன் உரையாடினார்.

அப்போதே மக்கள் இந்த தகவலை தெரி வித்தனர். அத்தோடு கடற்படையினரால் அழை த்துச் சென்றவர்கள் குறித்து இதுவரை எவ் வித தகவலும் இல்லை எனவும் உறவினர் கள் இந்நிகழ்வின் போது தெரிவித்தனர்.

மேலும் கடந்த 2 வருடங்களில் மன்னார் மாவட்டத்தில் 150க்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-6)

# தடுத்து வைக்கப்பட்ட தமிழ் அகதிகளை அவுஸ்திரேலியா ஏற்க வேண்டும்

## தமிழ் அகதிகள் நலன் பேணும் அமைப்பு

(கொழும்பு)

இந்தோனேஷியாவில் மெராக் துறைமுகத்தில் கடந்த 5 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 250 இலங்கை தமிழ் அகதிகள் மற்றும் மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளின் குடிவரவு இலாகா தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை தமிழ் அகதிகள் அனைவரையும் அவுஸ்திரேலிய அரசு மனிதாபிமான விசாத் திட்டத்தின் கீழ் ஏற்று இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டும் என தமிழ் அகதிகள் நலன் பேணும் மனிதாபிமான அமைப்பின் தலைவரும் அவுஸ்திரேலிய தமிழ் கலாசார கழகத்தின் பொதுச் செயலாளருமான நா.கி.விக்கிரமசிங்க, அவுஸ்திரேலிய பிரதமர் கெவின்ரோ, அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீபன் ஸ்மித் ஆகியோரிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இற்றை வரை பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் மக்கள் உயிரிழந்தது மட்டுமன்றி தமது உடைமைகள், வாழ்விடங்கள் என்பன அழிக்கப்பட்டு அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை உலக நாடுகள் அனைத்திற்கும் தெரிந்த உண்மை.

இலங்கையில் நடைபெற்ற மோதல் காரணமாக தமிழ் அகதிகள் தமது உயிரை பணயம் வைத்து இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளுக்கான (UNHCR) உயர்ஸ்தானிகர் அமைப்புடன் அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பித்தனர். அந்த நாடுகளின் குடிவரவு திணைக்கள தடுப்பு முகாம்களில் பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத நாடுகள் என்ற காரணத்தால் இவர்களை அந்நாடுகள் ஏற்கவில்லை. இதற்கு மாறாக தடுப்பு முகாம்களில் அவர்களை வைத்துள்ளது.

வருடந்தோறும் அவுஸ்திரேலிய அரசு 13ஆயிரம் அகதிகளை மனிதாபிமான விசாத் திட்டத்தில் ஏற்கும் நாடாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இன்று 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் அவுஸ் திரேலியாவில் தேசிய ரீதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதுவரை காலத்தில் அகதிகளாக அவுஸ்திரேலிய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கைத் தமிழர்கள் தற்பொழுது பேராசிரியர்களாக, பொறியியலாளர்களாக, வைத்திய நிபுணர்களாக, ஆராய்ச்சியாளர்களாக அவுஸ்திரேலியாவின் முன்னேற்றத்தின் ஒரு அங்கமாக தமது பங்களிப்புகளை வழங்கி வருகிறார்கள்.

ஆகவே தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகளால் விசாரணைக் குட்படுத்தப்பட்டு (UNHCR) உதவியுடன் அவுஸ்திரேலியாவில் அவர்களுக்கு மனிதாபிமான வதிவுரிமை வழங்க வேண்டும் என்று தெரிக்கப்பட்டுள்ளது. (2-6)

# பொன்சேகா கைதானது உள்நாட்டு விவகாரம் சீனா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்பட்டதும், அதன் பின் அங்கு ஏற்பட்டுள்ள சம்பவங்களும் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்கள், எனவே அது தொடர்பில் கருத்துக்கூற முடியாது என சீனா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சீன வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் மா சாவோசூ மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை என்பது உள்நாட்டு விவகாரம். வேறு நாடுகளின் உள்விவகாரங்களில் சீனா ஒரு போதும் தலையிடுவதில்லை.

எனவே இலங்கையின் நிலைகுறித்து கருத்து எதனையும் தெரிவிக்கும் நிலையில் நாம் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் பொன்சேகாவை இலங்கை அரசு சட்டவிரோதமாக கைது செய்துள்ளதை தொடர்ந்து பல நாடுகள் தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில் சீனாவின் கருத்துக்களை ஊடகவியலாளர்கள் கேட்டபோதே சீனா மேற்கூறியவாறு பதில் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# வன்னியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான பணிகள் மந்தகதியில்

(கொழும்பு)

வன்னியில் ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கின்றபோதும் மக்களுக்கான பணிகள் மிகவும் மந்த கதியிலேயே நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்களுக்குத் தேவையான கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள், சந்தை, பாடசாலைகள் போன்ற அடிப்படைத் தேவைகள் கூட சீரற்ற நிலையிலேயே இருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

மேலும் மக்கள் தங்கள் தேவைகளுக்காக மேலதிகாரிகளை நாடுகின்ற போதும் அவர்களால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இது குறித்துக் கேட்டபோது மீள்குடியேற்றம் சரியான முறையில் திட்டமிடப்படவில்லை என்றும் தங்கள் சக்திக்கு ஏற்ற வகையில் மக்களின் நிலைமையைக் கருத்திற் கொண்டு தாம் பணியாற்றுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மீள்குடியேற்றத்துக்குத் தேவையான நிதியோ, பிற உதவிகளோ, உபகரணங்களோ, பிரத்தியேக வாகனங்களோ எதுவும் வழங்கப்பட வில்லை எனவும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கே தம்மால் முடியாதிருப்பதாகவும் பெயர் குறிப்பிடவிரும்பாத அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதுவரையில் இந்த மீள்குடியேற்றப்பகுதிகளுக்கு சம்மந்தப்பட்ட அமைச்சர்களோ உரிய அமைச்சுக்களின் உயரதிகாரிகளோ நேரில் வந்து நிலைமைகளைப் பார்வையிடவில்லை எனவும் ஒரு சிறப்புத் திட்டத்தின் அடிப்படையில் உதவிகள்- அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# புனேயில் குண்டுவெடிப்பு; 8 பேர் பலியாயினர்

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள புனே நகரில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்தனர். இதில் ஒருவர் வெளிநாட்டவர். 30ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

புனேயின் ஓசோ ஆச்சிரமம் அருகே உள்ள ஜெர்மன் பேக்கரியில் இந்த வெடிப் புச் சம்பவம் ஏற்பட்டது. அந்த இடம் வெளிநாட்டுப்பயணிகள் மற்றும் பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் கூடும் இடம் என்பது குறிப்பிடத்தக்கது. சபாட் ஹவுஸ் அதற்கு மிக அருகில் உள்ளது.

சனிக்கிழமை மாலை என்பதால் அந்த இடத்தில் ஏராளமானவர்கள் கூடியிருந்ததாகத் தெரிகிறது. மாலை 7. 15 மணியளவில் பெருத்த சத்தத்துடன் ஜெர்மன் பேக்கரியில் வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டது. அதன் தாக்கத்தால் பலர் பேக்கரிக்குள் இருந்து வெளியில் தூக்கி எறியப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றார்கள். (2-6)

# மரண அறிவித்தல்



## செல்லப்பா செல்வரட்ணம்

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு (கல்வியங்காடு) யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் 3ஆம் வட்டாரம் முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா- செல்வரட்ணம் அவர்கள் 12.02.2010 (வெள்ளிக்கிழமை) காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லப்பா-தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை, நடராசா, பாலசுந்தரம், சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் வசந்தகுமாரி, செல்வராசா, ஜெயராசா, சிவராசா, வரதராசா, சாந்தகுமாரி, ஜீவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ரெத்தினசிங்கம், பவநிதி, ராணி, புஸ்பராணி, துஸி, கமலகாந்தன், யாமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.02.2010 இன்று (திங்கட்கிழமை) பி.ப.4.00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:-
குடும்பத்தினர்
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு
(கல்வியங்காடு), யாழ்ப்பாணம்.

(C-4445)

# இலங்கை மீன்பிடி படகுகள் இந்திய கடலில் பறிமுதல்

இந்திய கடல் எல்லையில் அத்துமீறி மீன்பிடித்த இரண்டு இலங்கை மீன்பிடி படகுகளை கடலோர காவல் படையினர் சுற்றி வளைத்துப் பிடித்தனர்.

கடலோர காவல்படை கப்பலான கிட்டூர் சொன்னம்மா ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்திற்கிடமான இரண்டு மீன்பிடி படகுகள் இந்திய கடல் எல்லையில் உலவுவதாக தகவல் கிடைத்தது. இதையடுத்து கடலோர காவல்படை விமானம் மற்றும் கப்பல் கள் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டு கண்காணிக்கப்பட்டது.

இதில் இலங்கையைச் சேநந்த அஞ்சனா மற்றும் பான் மாலு லங்கா என்ற இரண்டு மீன்பிடி படகுகள் இந்திய கடல் எல்லைக்குள் 30 கடல் மைல்கள் வந்து மீன் பிடித்தது தெரிய வந்தது. இந்த படகுகளிலிருந்து ஒன்பது மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். (2-6)

# கடன்முறிகளை விநியோகிப்பதன் மூலம் 500 மில்லியன் டொலர்களை திரட்ட திட்டம்

(கொழும்பு)

பத்துவருட முதிர்ச்சிக் காலத்தை கொண்ட கடன்முறிகளை விநியோகிப்பதன் மூலம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் பொதுத் தேர்தல் முடிவடைந்து, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இக்கடன் முறிகள் விநியோகிக்கப்படும் என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

வடமாகாண பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்காக புதிய வீதிகள் வைத்தியசாலைகள், பாடசாலைகள் என்பவற்றை அமைப்பதற்காக எதிர்வரும் 3 வருடகாலத்தில் எமக்கு 2.7 பில்லியன் டொலர் தேவைப்படும். இலங்கை தற்போது முதிர்ச்சியடைந்துள்ளதுடன் நீண்டகால முதலீடுகளைச் செய்வதற்கேற்ற முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ளது என நாம் கருதுகிறோம் எனவும் மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் கூறியுள்ளார்.

இலங்கை 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கடன் முறிகள் மூலம் 500 மில்லியன் டொலர்களை திரட்டியமை குறிப்பிடத்தக்கது. (2-6)




யாழ்.புனித திரேசா மகளிர் கல்லூரி கால்கோள் விழாவில் அதிபர் அருட்சகோதரி மரியறொசாரியோ, ஆரம்பக்கல்வி முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் ந.சுவாமிநாதன், முன்னாள் உப அதிபர் செல்வி இராஜமலர் இராஜதுரை ஆகியோர் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துவரப்படுவதையும் தரம் 1, தரம் 2 மாணவர்களுடன் விருந்தினர்கள் மற்றும் ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## திணைக்களத் தலைவர்களின் பதவி விலகல் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அரசு அறிவிப்பு

(கொழும்பு)

அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனத் தலைவர்களின் இராஜினாமாக்கள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீள் அறிவிப்பு விடுக்கப்படும் வரையில் தொடர்ந்தும் தலைமைப் பொறுப்பை வகிக்குமாறு அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சகல அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களையும் பதவி விலகுமாறு அண்மையில் அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் வரையில் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட மாட்டாது எனவும் அதன் பின்னர் பதவிகளில் மாற்றம் எற்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும் சில பதவிகளில் மட்டும் மாற்றங்கள் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## முல்லைத்தீவில் மேலும் மூவாயிரம் பேர் இன்று மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்

(கொழும்பு)

முல்லைத்தீவு பகுதியில் மேலும் மூவாயிரம் பேர் இன்று மீள் குடியமர்த்தப்படவுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பகுதியிலுள்ள சொந்த வாழ்விடங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதேவேளை கட்டயாமலை, முத்துவிநாயகபுரம் கிராமங்களிலும் மாங்குளம் கிழக்குப் பகுதியை சேர்ந்த பத்தினிக்குளம் பிரதேசத்திலும் இடம்பெயர்ந்த ஆயிரம் பேரை குடியமர்த்தும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்தவர்களுள் இன்னமும் 40 ஆயிரம் பேர் முகாம்களில் தங்கியிருக்கிறார்கள் எனவும் 3 நாட்களுக்கு ஒரு தடவை மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார். (2-6)

## சரத்பொன்சேகா கைது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்

### பேராயர் துலிப் டி சிக்கேரா

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா கைது விவகாரம் தொடர்பில் மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டிய அவசியம் காணப்படுவதாக கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் துலிப் டி சிக்கேரா தெரிவித்துள்ளார்.

இந்த கைது நடவடிக்கை தொடர்பில் மக்கள் மத்தியில் பல்வேறு கருத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே , கைதிற்கான காரணம் தெளிவுபடுத்தப்பட்டால் மக்கள் மனதில் காணப்படும் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இராணுவப் படையில் மிகவும் உயர் பதவி வகித்த அதிகாரி ஒருவர் நடத்தப்பட்ட விதம் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தும் வகையில் அமையப் பெற்றுள்ளதாகவும் இராணுவக் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அதனை இராணுவ நீதிமன்றம் முன்னெடுப்பதில் தவறில்லை என்ற போதிலும் சரத் பொன்சேகாவின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென பேராயர் சிக்கேரா மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## மட்டக்களப்பு நாவற்காட்டு பகுதியில் பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு-வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்காடு பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்கள் கடந்த வெள்ளிக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் வழங்கிய தகவலையடுத்து இவை கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இதில் விமானத்தை தாக்கியழிக்கும் ஆயுதங்கள் , கைக்குண்டுகள், ஸ்னைப்பர் ரக ஆயுதங்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான வெடி பொருட்கள் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட புலிகள் இயக்க முக்கியஸ்தர் கொழும்பில் புலனாய்வு பொலிஸாரின் விசாரணையில் தொடர்ந்தும் இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் நாவற்காடு வைத்தியசாலையில் கடமையாற்றிய சிங்கள வைத்தியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் இந்த நபருக்கு தொடர்பிருப்பதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## தேர்தல் குறித்து மு.கா,ம.ம.முன்னணி ஆகியன இறுதி தீர்மானம் எடுக்கவில்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல்பீடம் முக்கிய தீர்மானங்களை எடுக்க உள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இதற்காக தனித்து போட்டியிடல் மற்றும் கூட்டணி சேர்தல் தொடர்பில் கட்சியின் பல்வேறு தரப்பினருடனும் அண்மைய நாட்களாக பேச்சுவார்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் புதன் அல்லது வியாழக்கிழமை இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என கட்சியின் பொதுக் செயலாளர் விஜயகுமார் தெரிவித்துள்ளார். (2-6)

## பொன்சேகா விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை

### ஆங்கில ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க மறுப்புத் தெரிவித்து வருவதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. குற்றச் செயல்கள் தொடர்பில் இராணுவ அதிகாரிகளின் முன்னர் சாட்சியமளிக்குமாறு ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு விடுக்கப்பட்ட உத்தரவினை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சித்தல், ஜனாதிபதி குடும்பத்தாரை படுகொலை செய்ய முயற்சித்தல் போன்ற குற்றச்சாட்டுகள் ஜெனரல் சரத் பொன்சேகா மீது சுமத்தப்பட்டுள்ள நிலையில் தாம் ஓர் பொது மகன் எனவும், இராணுவ நீதிமன்றின் முன் கருத்துக்களை வெளியிட வேண்டிய அவசியமில்லை எனவும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

தற்போது விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத காரணத்தினால் சட்ட சிக்கல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மேலும் விசாரணைகளின் போது குறைந்த தரத்தையுடைய அதிகாரிகளினால் விசாரணை நடத்தப்பட முடியாது என்ற காரணத்தினால் ஓய்வு பெற்ற படையதிகாரிகள் இருவரை விசாரணைக்குழுவில் உள்ளடக்குவது குறித்து ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## ஆர்ப்பாட்டங்கள் மீதான தாக்குதல் அடிப்படை ஜனநாயக உரிமை மீறல்

### ஐந்து ஊடக அமைப்புகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொழும்பு மற்றும் வெளியிடங்களில் கடந்த 10 ஆம்திகதி எதிர்க்கட்சிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் மீது காவல்துறையினர் தாக்குதல் நடத்தி அவற்றைக் கலைத்ததானது நாட்டு மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையான கருத்துக் கூறும் சுதந்திரத்தை மீறும் நடவடிக்கையென ஐந்து ஊடக அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளன.

பல நிலைப்பாடுகளைக் கொண்ட ஜனநாயக சமுகத்தில் கட்டாயமாக இருக்க வேண்டிய எதிர்க்கட்சி அரசியல் இலங்கையில் படிப்படியாக மட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இந்தத் தாக்குதல்கள் மூலம் உறுதியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் பிரதான எதிர்ப்பு நடவடிக்கையின் மீது தாக்குதல் நடத்தச் சென்ற வன்முறையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய காவல்துறையினர் இறுதியில் அமைதியான முறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் அரசியலமைப்பு ரீதியான உரிமைகளைப் பாதுகாப்பதை விட அரசியல் ஆதரவுபெற்ற வன்முறைக் குழுக்களைப் பாதுகாக்க தாம் கடமைப்பட்டுள்ளதாக காவல்துறையினர் நடந்து கொண்ட விதம் சுட்டிக்காட்டுவதாக ஊடக அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (2-6)

# மீள்குடியேற முடியா நிலையில் தேவன்பிட்டியில் குடிமனைகள்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த தேவன்பிட்டி மக்கள் மீள்குடியேற்றம் செய்வதற்காக கடந்த வெள்ளியன்று கூட்டி வரப்பட்டு தேவன்பிட்டி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் அதற்கருகாமையில் உள்ள தேவன்பிட்டி புனித சவேரியார் தேவாலயத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

235 குடும்பங்களைச் சேர்ந்த 800 பேர் இவ்வாறு அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரினதும் வீடுகள் சேதமடைந்த நிலையில் தற்காலிக கூடாரங்களை அமைப்பதற்காக தகரம், இறப்பர் சீட் போன்றவை வழங்கப்பட்டுள்ளபோதிலும் பலகை, மரம் போன்றவை வழங்கப்படாததினால் தற்காலிகக் கூடாரங்களை அமைக்க முடியாதிருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இப்பகுதியில் குடிநீரை பெற்றுக் கொள்வதிலும் பாரிய அசௌகரியத்தினை எதிர்நோக்கி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த இடத்திற்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் மக்களுடன் உரையாடியதோடு இவ்விடயங்கள் தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். (2-6)

# பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள அ.இ. சிறுபான்மை தமிழர் மகாசபை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையும் போட்டியிடவுள்ளது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் ஆரியகுளம் சன்மார்க்க சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறுபான்மைத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த கல்விமான்கள், புலம்பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

பொதுத் தேர்தல் தொடர்பான பிரசாரங்களை கிராமந்தோறும் செய்வதெனவும் அதற்கான நடவடிக்கைகயைத் துரிதப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மீண்டும் இது தொடர்பாக இச்சபை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் கூடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-134)

# ஐ.ம.சு. கூட்டணியில் போட்டியிடுவோர் ஜனாதிபதியின் விருப்பின் பேரிலேயே தெரிவு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட வேட்பு மனுச்சபை எப்படியான நபர்களைப் பரிந்துரைத்த போதிலும் ஜனாதிபதியின் விருப்பத்தின் பேரிலேயே வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கழுத்துப்பட்டி அணிந்து கோவைகளைச் சமர்ப்பித்து வேட்பாளராகத் தெரிவாவதற்கு எவ்வாறான தகுதிகள் முன்வைக்கப்பட்ட போதிலும் நாம் எவ்வாறான பரிந்துரைகளைச் செய்தாலும் இறுதியில் நாம் முட்டாள்கள் ஆவோம் என வேட்பாளர் தெரிவுச் சபையின் நடவடிக்கைகளுக்குத் தலைமையேற்றிருந்த அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசாங்கத்தில் இணைந்து கொண்டவர்களுக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை மக்கள் கட்சி, ஹெல உறுமய, வீரவன்ச அணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பேரியல் அஷ்ரப் அணி, ரிஸாட் பதியூன் அணி, அதாவுல்லா அணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகிய அணிகள் கூட்டணியில் அங்கம் வகிப்பதால் இவர்களுக்குத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் அளிக்கவேண்டியுள்ளது. அத்துடன் ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷவின் நீலப்படையைச் சேர்ந்த சுமார் 30 பேர் வேட்பாளர்களாகப் போட்டியிட விண்ணப்பித்துள்ளனர்.

இதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சிரேஷ்ட தலைவர்கள் உள்ளிட்ட பலர் கட்சிக்காக தியாகம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக அந்த அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை தேசியப் பட்டியலில் நியமிக்கப்பட்டு வந்த சிலருக்கும் இம்முறை அந்த வாய்ப்பு இல்லாமல் போகும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (2-6)

# இந்தியாவிலுள்ள சகல வங்கிகளிலும் ஏ.ரி.எம். வலையமைப்புடன் இணைய இலங்கை வங்கி திட்டம்

(கொழும்பு)

இந்தியாவில் உள்ள சகல வங்கிகளிலும் ஏ.ரி.எம். (திஹிணி) வலையமைப்புடன் இணைந்து கொள்வதற்கு இலங்கை வங்கி நடவடிக்கை எடுத்து வருவதாக வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க தெரிவித்தார். இது தொடர்பாக டாடா நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வங்கியின் தல்லவர் கூறினார்.

இந்தியாவில் உள்ள பத்தாயிரத்திற்கும் அதிகமான ஏ.ரி.எம். வலையமைப்புக்களுடன் இலங்கை வங்கி இணைந்து கொள்வதன் மூலம் இலங்கையில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் இந்தியாவில் எந்தவொரு வங்கியின் ஏ. ரி.எம். இயந்திரத்திலும் பணத்தை மீளப்பெற முடியும் என கலாநிதி காமினி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்தியாவின் சென்னை மாநகரத்தில் மட்டுமே தற்போது இலங்கை வங்கியின் கிளை இயங்கி வருகிறது. அதனால் இலங்கை வங்கியின் ஏ. ரி.எம் அட்டைகளைப் பயன்படுத்தி சென்னையில் மட்டுமே பணத்தை மீளப்பெற முடிகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# கட்சி தாவலைத் தடுக்க ஐ.தே.க. புதிய திட்டம்

(கொழும்பு)

கட்சி தாவல்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி புதிய திட்டமொன்றை அமுல்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களிடமிருந்தும் இராஜினாமா கடிதங்கள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

கட்சி தாவினால் கட்சியை விட்டு நீக்கும் அதிகாரத்தை வழங்கக்கூடிய வகையில் புதிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய நடைமுறைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு பூரண அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரால் கட்சி செயற்குழுக் கூட்டத்தின்போது இந்த யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சுய இலாப நோக்கங்களுக்காக தமக்கு வாக்களித்த வாக்காளர்களை நிர்க்கதியான நிலைக்குத் தள்ளிச் செல்லும் நபர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# 2016இல் அரசியல் புரட்சியை ஏற்படுத்துவேன்

சீமான்



ஈழத்தமிழர்களுக்காக உயிர் நீத்த முத்துக்குமாரின் முதலாவது ஆண்டு நினைவைப் போற்றும் வகையில் சேலம் போஸ் மைதானத்தில் நாம் தமிழர் இயக்கம் சார்பில் பொதுக்கூட்டம் நடந்தது. நிகழ்ச்சிக்கு நாம் தமிழர் இயக்க ஒருங்கிணைப்பாளரும் இயக்குநருமான சீமான் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது; வரும் மே 18ஆம் திகதி நாம் தமிழர் இயக்கத்தை அரசியல் இயக்கமாக அறிவிக்க இருக்கிறேன். இதுதான் எனது இலக்கு. இதன் பின்னர் 2016 இல் பெரிய அரசியல் புரட்சி ஏற்படுத்திக்காட்டுவேன்.

தமிழ் இனத்திற்காக முத்துக்குமார் போன்ற பலர் உயிர் நீத்துள்ளார்கள். நம் நாட்டில் காட்டில் எவ்வளவு புலிகள் உள்ளது என்பதைக் கணக்கிடுகிறார்கள். மிருகங்களை வதை செய்யக்கூடாது என்று கூறுகிறார்கள்.

ஆனால் ஒரு இனமே அழிந்து கொண்டு இருக்கிறது. ஒன்றரை இலட்சம் பேர் இறந்துள்ளனர். உலகம் முழுவதும் நாம் உள்ளோம். உலகம் பெருமைப்பட்டு பார்க்கும் இனமாக தமிழ் இனம் உள்ளது. நம் மொழி, இனம் காப்பதற்காக தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவோம். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது. சென்னை சாஸ்திரிபவன் அமைந்துள்ள ஹாரிங்டன் சாலைக்கு மாவீரன் முத்துக்குமார் சாலை என பெயரிட வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக சேலம் செவ்வாய்பேட்டையில் இருந்து பேரணி நடந்தது. இதில் இயக்குநர் சீமான் மற்றும் பலர் கலந்து கொண்டு நடந்து வந்தனர். முக்கிய வீதி வழியே சென்ற பேரணியினர் போஸ் மைதானத்தை அடைந்தனர். (2-6)

# இலங்கை இராஜதந்திர மட்ட பிரச்சினையை எதிர்கொள்ளுமா?

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் விரைவில் இராஜதந்திர மட்டப் பிரச்சினையை எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, சினமன் லேக்சைட் ஹோட்டலில் இருந்து கொண்டு அரசாங்கத்தை கவிழ்க்கத் திட்டமிட்டதாகக் கூறப்படும் சம்பவத்தின்போது அங்கிருந்த வெளிநாட்டு ஊடகவியலாளர்களை விசாரணை செய்ய பாதுகாப்பு அதிகாரிகள் முனையும் நிலையிலேயே இந்த இராஜதந்திர நகர்வு எடுக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு அதிகாரிகள், விசாரணை செய்யவுள்ள ஊடகவியலாளர்களில் இந்திய நியூஸ் எக்ஸ் தொலைக்காட்சி சேவையின் ஊடகவியலாளரும் உள்ளடங்குகிறார்.

இந்த நிலையில் தமது ஊடகவியலாளர் சார்பில் இந்திய அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (2-6)

# ஐவரிகோஸ்ட் பாராளுமன்றத்தை அந்நாட்டு ஜனாதிபதி கலைத்துள்ளார்

ஐவரிகோஸ்ட் ஜனாதிபதி கெபாக்போ அந்நாட்டு பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்நாட்டுத் தேர்தல் செயலகத்தையும் அவர் கலைத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு அந்நாட்டு பிரதமர் குலியமுசோரொவிடம் கோரியுள்ளதாகவும் தெரிகிறது.

இதேவேளை 4 இலட்சம் வாக்காளர்களை சட்டவிரோதமான முறையில் இணைக்கும் திட்டமொன்றை அந்நாட்டு தேர்தல் செயலகம் முன்னெடுத்து வருவதாக குற்றம் சுமத்தியுள்ள அவர் குறித்த வாக்காளர்களைப் பதிவு செய்யக்கூடாது எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐவரிகோஸ்ட் உலகில் மிகப்பெரிய கொக்கோ உற்பத்தி நாடாக கருதப்படுகிறது.

அண்மைக்காலமாக உள்நாட்டு யுத்தம் காரணமாக அது பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐவரிகோஸ்டில் தேர்தல் பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தேர்தல் ஆணையாளர் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாகவும் அந்நாட்டு மக்களுக்கு சேவையாற்றக் கூடியவர்களே அரசாங்கத்தில் சேவையாற்ற வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் திகதி நடைபெறவிருந்த பொதுத் தேர்தல் ஆறு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (2-6)





மாதகல் தூய லூர்த்து அன்னையின் திருநாள் நவநாட்கள் அண்மையில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் யாழ்.ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-றம்சன்)

# கோப்பாய் பகுதியில் பாதீனியம் செடிகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தி ,கோப்பாய் வடக்கு பகுதிகளில் தனியார் மற்றும் பொது காணிகளில் பெரும் தொகையான பாதீனியம் செடிகள் பரவலாக வளர்ந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

காணிகளில் வளர்ந்துள்ள இச்செடிகளை அழிப்பதில் இப்பகுதியில் அசமந்த போக்கே காணப்படுகின்றது.

இச்செடியை அழிப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின்ரும் உதவி அரசாங்க அதிபரும் கவனம் செலுத்தி இச்செடியின் மூலம் ஏற்படும் விளைவுகளை மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி முற்றாக அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (6)

## பொன்சேகாவின் விடுதலை கோரி

# மொனராகலையில் பேரணி —பொலிஸார் தாக்குதல்—

(கொழும்பு)

அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று மொனராகல பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணி மீது காவல் துறையினர் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஜெனரல் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று மொனராகல பகுதியில் ஜே.வி.பி. ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. மொனராகல பேரூந்து நிலையத்திற்கு அண்மையாக இம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டம்மீது பொலிஸார் தாக்குதல்களை மேற்கொண்டதுடன் ஆறு பேரை கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை மொனராகல பேரூந்து நிலையத்தில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பொதுமக்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியதாகவும் பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்டதாகவும் பொலிஸ் பேச்சாளர் பிரசாந்தா ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இந்த மோதல்களில் 3 பொலிஸார் காயமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# ரயில்கள் மூலம் கொள்கலன்களை கொண்டுசெல்லும் நடவடிக்கை

சுமார் 20 வருடங்களுக்கு பின்னர் ரயில்கள் மூலம் கொள்கலன்களை கொண்டு செல்லும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொள்கலன்களில் உள்ள பொருட்களை கொண்டு செல்வதற்காகவே ஒக்கப்பட்டுள்ள ரயில்கள் இச்சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் மேலதிக பொது முகாமையாளர் ஜி.ஆர்.பி சந்திரதிலக தெரி வித்தார்.

இதன் பிரகாரம் கொள்கலன்களை கொண்ட ரயில் வண்டி ஒன்று கொழும்பில் இருந்து தாண்டிக்குளம் நோக்கி புறப்பட்டு சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொள்கலன்களை பெருந்தெருக்கள் ஊடாக கொண்டுசெல்லும் போது வீதிகள் சேதமடைவதாலும் போக்குவரத்து நெருசல் ஏற்படுவதாகவும் இதனை கருத்திற்கொண்டே ரயில் மூலம் கொள்கலன்களை கொண்டு செல்லும் நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ரயில்வே திணைக்களத்தின் மேலதிக பொதுமுகாமையாளர் மேலும் தெரிவித்தார். (6-4)

# மின்சார கேபிள் அறுந்து விழுந்ததில் நைஜீரியாவில் 10 பஸ் பயணிகள் பலி

(கொழும்பு)

நைஜீரியாவில் மின்சார கேபிள் அறுந்து வீழ்ந்ததில் பத்துபஸ் பயணிகள் பரிதாபமாக கொல்லப்பட்டுள்ளனர்.

தென் நைஜீரியாவின் போர்ட் ஹார்ட் கோட்நகரில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸில் பயணம் செய்தமேலும் 12 பேர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும், இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீக்கிரையான சடலங்கள் அடையாளம் காணும் நோக்கில் நைஜீரிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

காயமடைந்த அனைவரும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அந்நாட்டு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மேலும் இந்த பஸ்ஸில் எத்தனை பேர் பயணம்செய்தார்கள். எத்தனைபேர் உயிர்தப்பினார்கள் என்பது குறித்து இதுவரை யில் சரியான தகவல்கள் வெளியிடப்படவில்லை. (2-6)

# செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப்பாடசாலைகளில் தரம் 10,11 இற்கு வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (6-4-19)

# பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இம்முறை தேர்தலில் போட்டியிடமாட்டார்

## லக்பிம தகவல்

(கொழும்பு)

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இம்முறைத் தேர்தலில் போட்டியிடமாட்டார் என லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதற்கமைய நாடாளுமன்றத் தேர்தலில் ரட்ணசிறி விக்ரமநாயக்க போட்டியிடவுள்ளதாக வெளியான செய்தியில் உண்மை யில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை இம்முறைத் தேசியப்பட்டியலின் ஊடாக நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றியீட்டினால் தொடர்ந்தும் பிரதமர் பதவியை வகிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் பிரதமரின் புதல்வர் விதுர விக்கிரம நாயக்க இம்முறை பொறாளைத்தொகுதியில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# அரசுக்கு எதிரானவர்களைத் தடுத்து வைக்க நான்கு தடுப்பு முகாம்கள் பிரகடனம்

(கொழும்பு)

அரசாங்கம் அவசர காலச் சட்டத்தின் கீழ் கடந்த 8ஆம் திகதி முதல் 4 தடுப்பு முகாம்களை பிரகடனம் செய்துள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலை பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய விடுத்துள்ளார்.

இதன்படி கொழும்பு -1 உள்ள கடற்படையின் தலைமையகம் , இராகமையில் உள்ள கடற்படையின் கெமுனுபிரிவு ,திருகோணமலையில் உள்ள கடற்படை டொக்கியாட் மற்றும் வவுனியா நெளுங்குளத்தில் உள்ள தொழில்நுட்பக்கல்லூரி ஆகியனவே தடுப்பு முகாம்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா கொழும்பு-1இல் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அரசாங்கத்திற்கு எதிராக போராடுபவர்களை தடுத்து வைப்பதற்காகவே இந்த தடுப்பு முகாம்கள் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக ஜே.வி.பி.குற்றம்சுமத்தியுள்ளது.

மேலும் வர்த்தமானியின் மூலம் 4 தடுப்பு முகாம்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதும் அரசாங்கம் தடுப்பு முகாம்களை அமைத்துள்ளதாக ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். (2-6)






சிறுப்பிட்டி இ.த.க பாடசாலையின் கால்கோள் நிகழ்வில் மாணவிகள் தேவாரம் இசைப்பதையும் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட சிறுப்பிட்டி தபாலக அதிபர் சி.சுப்பிரமணியம், மற்றும் அதிபர் இ.தேவராசா, பாடசாலை அபிவிருத்திச் சபைச்செயலாளர் செ.சிறீதரன் ஆகியோர் நிற்பதையும் தரம் 1, தரம் 2 மாணவர்களுடன் விருந்தினர்கள் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

# தெலுங்கானாவில் 'பந்த்' நடவடிக்கை; — பல இடங்களில் வன்முறை —



(ஐதராபாத்)

தெலுங்கானா தனி மாநில கோரிக்கை பற்றி ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தெலுங்கானா பகுதிக ளில் நேற்றுமுன்தினம் "பந்த்" நடத்தப்பட்டது. பல இடங்களில் வன் முறை வெடித்தது. ஆந்திராவை பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க வேண் டும் என ராஷ்டிரிய சமிதியின் தலை வர் சந்திரசேகரராவ், சாகும்வரை உண்ணா விரதம் இருந்தார். மற்றொரு பக்கம், ''ஆந்திராவை பிரிக்கக்கூடாது'' எனப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதையடுத்து, களத்தில் இறங்கிய மத்திய அரசு, தெலுங்கானா தனி மாநில கோரிக்கை குறித்து ஆய்வு செய்வதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி ஸ்ரீ கிருஷ்ணா தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழுவை அமைத்தது. இந்த குழு என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டும் என ஏழு அம்சத் திட்டத்தை மத்திய அரசு கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது. அத்துடன் இவ்வாண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் அறிக்கை தரவேண்டும் என்று காலவரையறையும் நிர்ணயிக்கப்பட்டது.

மத்திய அரசின் இந்த அறிவிப்பு, தெலுங்கானா ஆதரவாளர்களிடையே கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. தெலுங்கானா மாணவர் போராட்டக்குழு மத்திய அரசின் முடிவைக் கண்டித்து நேற்று முன்தினம் 'பந்த்'திற்கு அழைப்பு விடுத்திருந்தன. இதனால் மேடக், வாரங்கல் உட்பட 10 மாவட்டங்களில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. கடைகள், வர்த்தக நிறுவனங்கள் அடைக்கப்பட்டிருந்தன. அரசு பஸ்கள் இயங்கவில்லை; கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. சில இடங்களில் பஸ்கள் மீது கற்கள் வீசப்பட்டன. மேலும் சில இடங்களில் காங்கிரஸ் அலுவலகங்கள் தாக்கப்பட்டன.

மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ கிருஷ்ணா குழுவின் முதல் கூட்டம் நேற்று முன்தினம் டில்லியில் நடந்தது. இதில், என்னென்ன பணிகளை முதலில் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. அப்போது, கூட்டம் நடந்த இடத்திற்கு வெளியில், ஆந்திராவைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் திரண்டு, போராட்டம் நடத்தினர். இதையடுத்து, அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கூட்டம் முடிந்ததும் நீதிபதி ஸ்ரீ கிருஷ்ணா கூறுகையில், குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் நடந்து வுருவது குறித்து நாங்கள் கவலைப்படவில்லை. பிரச்சினையை ஆய்வு செய்து அரசிடம் அறிக்கை அளிப்பதே எங்கள் வேலை. விரைவில் ஐதராபாத் செல்லவுள்ளோம் என்றார். (2-6)

# பாம்புகளை உயிருடன் பிடித்து உண்ணும் விசித்திரமான மனிதர்

(லக்னோல்)

உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த ஒரு தொழிலாளி, கடந்த 20 ஆண்டுகளாக உயிருடன் உள்ள பாம்புகளை உணவாகச் சாப்பிடும் வினோதமான பழக்கத்தை கடைப்பிடித்து வருகிறார். '' பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்'' என்பது பழமொழி. ஆனால் அவரைக் கண்டால், அங்குள்ள பாம்புக் கூட்டமே நடுங்குகிறது. ஆம். அங்குள்ள சீதாபூர் மாவட்டத்தில் சுரய்ச்சா என்ற குக் கிராமம் உள்ளது. இங்குள்ள ஒரு எஸ்டேட்டில் நன்கு (44) என்ற கடற்தொழிலாளி பணி புரிந்து வருகிறார்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன், இவர் நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். விரக்தி அடைந்த அவர், தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தார். ஒரு விஷப் பாம்பை அடித்துக் கொன்று, அதை வேக வைத்து சாப்பிட்டார். விஷமுடைய பாம்பைச் சாப்பிட்டால் இறந்து விடுவோம் என்பது அவரின் நம்பிக்கை. ஆனால், அவர் நினைத்தது போல் எதுவும் நடக்கவில்லை.

இது, அவருக்கே ஆச்சரியத்தை அளித்தது. இதற்குப் பின், தனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம், தொடர்ச்சியாக பாம்புகளைப் பிடித்து, சமைத்து சாப்பிடத் தொடங்கினார். சில நாட்களிலேயே இறந்த பாம்புகளை எத்தனை நாளைக்குத் தான் சாப்பிடுவது என இவருக்கே போரடித்து விட்டது போலும். பாம்புகளைப்பிடித்து, உயிருடன் சாப்பிடத் தொடங்கினார். அப்போதும், இவருக்கு எதுவும் ஆகவில்லை.

கடந்த 20 ஆண்டுகளாக உயிருடன் உள்ள பாம்புதான் அவரது வழக்கமான உணவாகிவிட்டது. பசி எடுத்தால் பொக்கெட்டில் காசு இல்லையே என இவர் அலட்டிக் கொள்வது இல்லை.

கிராமத்தில் அருகே உள்ள வயல்வெளிகளுக்குச் சென்று, புதர்களுக்குள் கையை விட்டு, ஏதாவது ஒரு பாம்பை பிடித்து வந்து விடுகிறார். அப்புறம் என்ன? அன்றைய தினம், பாம்புதான் மதிய உணவு. இப்படியே இவரது காலம் போகிறது.

இதனால், இப்போதெல்லாம் சுரய்ச்சா கிராம மக்கள், தங்கள் குடியிருப்பு பகுதிகளுக்கு பாம்பு வந்தால், பயப்படுவது இல்லை. நன்குவை அழைத்து வந்து, அதைப் பிடிக்கச் செய்து விடுகின்றனர். கிராமத்தில் உள்ள குழந்தைகளும் நன்குவை ''. பாம்பு மாமா'' என்றுதான் பாசத்துடன் அழைக்கின்றன.

சீதாபூர் மாவட்ட மருத்துவமனையின் தலைமை மருத்துவர் சரத் சந்திரா கூறுகையில், '' இது ஒன்றும் புது விஷயமல்ல. அசாம், மணிப்பூர் போன்ற வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த சிலர், பாம்புகளை உயிருடன் சர்வசாதாரணமாக பல ஆண்டுகளாக சாப்பிட்டு வருகின்றனர்'' என்றார். (2-6)

# அ.தி.மு.கவுக்கு எதிர்க்கட்சிக்கான தகுதியே இல்லாமல் போகவுள்ளது

## அமைச்சர் பொன்முடி

அ.தி.மு.க.பொதுச் செயலர் ஜெயலலிதாவிற்கு விரைவில் எதிர்க்கட்சி பதவி பறிபோகும் நிலை உள்ளது என்று அமைச்சர் பொன்முடி பேசினார். விழுப்புரத்தில் நடந்த மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பேசியதாவது, தமிழகத்தில் விழுப்புரம் மாவட்ட தி.மு.க.கட்டுப்பாட்டோடு இயங்குகி றது. தொலைபேசியில் கொடுத்த தகவலின் பேரில், அ.தி.மு.க. ஆட்சியில் கரும்பு விவசா யிகள் பாதித்த விவரத்தை புள்ளி விவரத் தோடு துண்டு நோட்டீஸ் குறுகிய காலத்தில் விநியோகித்த பெருமை நம் மாவட்ட நிர்வாகி களுக்கு உண்டு.

அ.தி.மு.கவிற்கு எப்படி ஆர்ப்பாட்டம் நடத்த உரிமை உண்டோ, அதேபோல் தி.மு.கவிற்கு துண்டு அறிக்கை வழங்கவும் உரிமை உள்ளது. ஜெயலலிதா தலைமை தாங்கி நடத்தும் முதல்போராட்டமும், கடைசி போராட்டமும் இதுதான். தமிழகத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இலவச மின்சாரத்தை ஜெயலலிதா தடை செய்த போது எதிர்த்து போராட்டம் செய்து சிறைக்கு சென்றவர்கள் விழுப்புரம் மாவட்ட தி.மு.கவினர்.. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கூட ஜெயலலிதா பறவை போல் பறந்துவந்து, மீண்டும் பறந்து சென்றிருக்கிறார். ஆனால் 86 வயதிலும் முதல்வர் கருணாநிதி மட்டுமே காரில் பயணம் செய்து மக்களை சந்திக்கிறார்.

விழுப்புரம் மாவட்டத்திற்கு எதிர்வரும் 7 ஆம் திகதி வரும் முதல்வர், துணை முதல்வரை வரவேற்க வைக்கும் பேனர்களில் அவர்களின் படத்தை தவிர மற்றவர்களின் படமோ, பெயரோ போடக்கூடாது. மேலும் அந்தந்த அணிகளின் பெயரோ அல்லது கிளைகளின் பெயர்தான் போடவேண்டும். கண்டிப்பாக அரசின் சாதனைகள் அதில் இடம்பெறவேண்டும். விழுப்புரத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், தி.மு.கவிற்கு மெஜாரிட்டியும் இல்லை. மெச்சூரிட்டியும் இல்லை என்று ஜெ. பேசினார். கடந்த 2006 ஆம் ஆண்டில் அ.தி.மு. கவிற்கு 61 எம்.எல்.ஏ.க்கள் இருந்தனர். தற்போது ஆறு பேர் காணாமல் போய்விட்டனர். விரைவில் ஜெயலலிதாவிற்கு எதிர்க்கட்சி தகுதியே இல்லாமல் போகும் நிலை உருவாக்கப்படும் . அதற்கான வேலைகள் நடக்கிறது என்றார். (2-6)




# உடுமலையில் வைகோ உண்ணாநிலை போராட்டம்

உடுமலைப்பேட்டையில் இருந்து 20 கி.மீ. தூரத்தில் அமராவதி அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணைக்கு கேரள மாநிலத்தில் உள்ள பாம்பாறு, தேனாறு, தமிழக எல்லையில் உள்ள சின்னாறு ஆகிய மூன்று ஆறுகளில் இருந்து தண்ணீர் வருகின்றது. 1956 ஆம் ஆண்டு இந்த அணை நீர்ப்பாசனத்துக்குத் திறந்து விடப்பட்டது.

அணை கட்டுவதற்கு முன்பே உடுமலைப் பேட்டை வட்டத்தில் இருந்து கரூர் வரை, ஆற்றில் குறுக்கே தடுப்பு அணை கட்டி, சுமார் 30 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெற்று வந்தது. அமராவதி அணை கட்டிய பின்னர், புதிதாக 25 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெற்று வருகின்றது.

இந்த நிலையில் தமிழக – கேரள எல்லையான மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள மறையூர் அருகே ரூ. 230 கோடி செலவில் புதிய அணை கட்ட கேரள அரசு ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. இதற்காக அமராவதி அணையின் நீராதாரமாக விளங்கி வரும் பாம்பாற்றின் குறுக்கே 110 ஏக்கர் பரப்பளவில் அணை கட்டுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

ஆகவே புதிய அணை கட்ட முயற்சிக்கும் கேரள அரசசைக் கண்டித்தும், அணை கட்ட மத்திய அரசு அனுமதி வழங்கக்கூடாது என வலியுறுத்தியும், இந்தப் பிரச்சினையில் தமிழக அரசு மெத்தனம் காட்டாமல் விரைவாக நடவடிக்கை எடுக்கக் கோரியும் ம.தி.மு.க இன்று காலை 8 மணியளவில் உடுமலைப் பேட்டை மத்திய பேருந்து நிலையம் எதிரில் பொதுச்செயலாளர் வைகோ தலைமையில் மாபெரும் உண்ணாவிரத அறப் போராட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# கின்னஸ் சாதனைக்காக பள்ளி மாணவி முயற்சி



இராமநாதபுரத்தில் ஹேர் கிளிப்களை சேகரித்துள்ள பள்ளி மாணவி ரமா கின்னஸ் சாத னைக்கு முயற்சி செய்துள்ளார்.

இராமநாதபுரம் வெளிப்பட்டி னத்தைச் சேர்ந்த சுந்தர் என்பவர் 398 உறிஞ்சும் குழாய்களை வாயில் வைத்து கின்னஸ் சாதனை புரிந்தார். இவரது தம்பி சுங்கர நாராயணன் 151 எரியும் மெழுகு வர்த்திகளை ஒரே மூச்சில் அணை த்து கின்னஸ் சாதனை புரிந்தார். இவர்களை தொடர்ந்து, பிளஸ் 2 படித்து வரும் இவர்களது தங்கை ரமாவும் கின்னஸ் சாதனை படைக்கும் முயற்சியில் இறங்கி உள்ளார்.

இதற்கமைய பல ஊர்களுக்குச் சென்று 549 ஹேர்கிளிப்களை சேகரித்துள்ளார். இதற்குமேல் சேகரிக்க போதிய நிதிவசதி இல்லை என கூறும் ரமா, சிறுவயதிலிருந்தே ஏதாவது ஒரு துறையில்சாதிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. எனது மூத்த சகோதரர்கள் கின்னஸ் சாதனை செய்ததை போல், நானும் கின்னஸ் சாதனை செய்யவேண்டும் என நினைத்தபோது தலையில் மாட்டிக் கொள்ளும் ஹேர் கிளிப் அதிகமாக சேகரித்து சாதனை செய்ய நினைத்தோன். உலகளவில் யாரும் செய்யாததால், இதை தேர்ந்தெடுத்தேன் என்றார். (2-6)

# இந்திராகாந்தியை கொன்றவர்கள் — தியாகிகளாக கௌரவிப்பு —

மறைந்த பிரதமர் இந்திராகாந்தியை சுட்டுக்கொன்ற பியாந்த் சிங், சத்வந்த் சிங், சேகர் சிங் ஆகியோரை தியாகிகளாக அறிவித்து நியூசிலாந்தில் உள்ள சீக்கிய குருத்வாராவில் கௌரவப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்திராகாந்தி 1984 ஆம்ஆண்டு தனது மெய்காவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர்களை பியாந்த் சிங், சத்வந்த் சிங், சேகர் சிங் ஆகியோர் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர்.

இதில் அவரது உடலில் சுமார் 30 குண்டுகள் பாய்ந்து படுகாயமடைந்தார். பின்னர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், இரத்தத்தை பெருமளவில் (ஓ நெகட்டிவ்) இழந்ததால், அந்த இரத்தம் கிடைக்காததால் உயிரிழந்தார்.

இந்திராவைக் கொன்ற சத்வந்த் சிங், பியாந்த் சிங் ஆகியோரை பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்றனர். சேகர் சிங் உயிருடன் பிடிக்கப்பட்டார். பின்னர் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டு விசாரணைக்குப் பின்னர் தூக்கிலிடப்பட்டார்.

இந்த நிலையிலேயே இந்த மூன்று பேரையும் நியூசிலாந்தில் உள்ள ஆக்லாந்து நகரில் உள்ள சீக்கிய குருத்வாராவில், தியாகிகளாக அறிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் புகைப்படங்கள் குருத்வாராவில் வைக்கப்பட்டு மாலை அணிவித்து மரியாதையும் செய்யப்பட்டது.

இதுகுறித்து குருத்வாரா நிர்வாகிகள் கூறுகையில், இந்திராவை கொன்றவர்கள் மதத்துக்காக தங்கள் உயிரை விட்டுள்ளனர். எனவே அவர்களை தியாகிகளாக நினைவு கூர்ந்துள்ளோம் என்று தெரிவித்துள்ளனர். (2-6)

# ஆப்கானில் தலிபான்களின் நகரை கைப்பற்றியது நேட்டோ படையணி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தெற்கில் உள்ள மார்ஜா என்ற நகரில் நேட்டோ இராணுவப் படைகளும் ஆப்கானிஸ்தானியத் துருப்புக்களும் நேற்று முன்தினம் அதிகாலை நுழைந்து அதைக் கைப்பற்றின.

இந்த நகரம் ஹெல்மாந்த் மாகாணத்தில் உள்ளது. மார்ஜா நகரம் காபூலுக்கு தென் மேற்கில் 610 கிலோமீற்றர் தொலைவில் இருக்கிறது.

நேட்டோ துருப்புக்கள் எண்ணிக்கை 15 ஆயிரத்துக்கும் மேல் இருக்கும் என்றாலும் இந்த நடவடிக்கையின்போது தலிபான்கள் தரப்பில் 20 பேர் தான் இறந்துள்ளனர். 11 பேர் ஆயுதங்களுடன் பிடிபட்டனர். வீடுகள் மீதோ, நகரின் மீதோ நேட்டோ படைகள் துப்பாக்கிகளாலும் பீரங்கிகளாலும் சுடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்காங்கே வாகனப் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த (மண்) சுவர்கள் மட்டுமே சிறுவெடிகள் மூலம் தகர்க்கப்பட்டன.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் 2001 ஆம் ஆண்டு நுழைந்ததற்குப் பின்னர் நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் இது. சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட ஹெலிகொப்டர்களும் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டன. நேட்டோப் படைகளின் விமானப் படைப் பிரிவும் தரைப்படை பிரிவுகளும் இணைந்து நகரைச் சுற்றிவளைத்துத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன.

தலிபான்களின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த நகரில் மக்கள் தொகை சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம். இந்த ஊரின் வறிய நிலைமை காரணமாக தலிபான்கள் தரும் பணத்துக்காக அவர்களுடைய ஆதரவாளர்களாக ஏராளமானோர் செயற்படுகின்றனர். இந்த ஊரைச் சுற்றி போதை மருந்து தயாரிக்கப் பயன்படும் கஞ்சா செடிகள்தான் அதிகம் சாகுபடி செய்யப்படுகின்றன. எனவே இந்த ஊரில் தலிபான்கள் தங்களுடைய கஞ்சா கிட்டங்கிகளை அமைத்து அவற்றிலிருந்து சரக்கை வெளிநாடுகளுக்கு அனுப்பி தங்களுக்குத் தேவைப்பட்ட ஆயுதங்களையும் வெடிகுண்டு போன்றவற்றையும் வாங்கி வந்தனர்.

கஞ்சா கடத்தலுக்கும் படைக்கு ஆள் சேர்ப்பதற்கும் அவர்களுக்கு இந்த நகரம் மிகப் பெரிய மையமாக இருந்து வந்தது.

பராக் ஒபாமா அமெரிக்க அதிபரான பின்னர் ஆப்கானிஸ்தானில் செயற்பட மேலும் 30 ஆயிரம் இராணுவ வீரர்கள் அமெரிக்காவிலிருந்து அனுப்பப்படுவார்கள் என்று அறிவித்திருந்தார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து தலிபான்களை ஒழிக்காமல் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற முடியாது என்பதை உணர்ந்து கொண்டதால் அவர்களுடைய செல்வாக்கு மிக்க தெற்குப் பகுதி நகரமான மார்ஜாவைக் கைப்பற்ற வேண்டும் என்று திட்டம் தீட்டப்பட்டது.

அதற்கு ஏற்ப படைகள் திரட்டி தென்பகுதி நோக்கி அனுப்பப்பட்டன. துருப்புக்களை நகருக்குள் இறக்குவதற்கும் எதிரிகள் அமைத்த தற்காப்பு அரண்களைத் தாக்கித் தகர்ப்பதற்கும் விமானப்படை ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டன. வீடுகள் மீதோ பொதுமக்கள் மீதோ குண்டுகளை வீசினால் அவர்களுடைய ஆதரவு கிடைக்காமல் போய்விடும் என்பதால் குண்டு வீச்சு நடத்தாமலேயே நகரைத் தாக்கியதாகக் குறிப்பிடப்படுகிறது.

தலிபான்கள் அவ்வளவு எளிதில் இந்த நகரை விட்டுக் கொடுத்துவிடவில்லை. நகரின் எல்லா வீதிகளிலும் வயல் வெளிகளிலும் திறந்த வெளிகளிலும் கண்ணி வெடிகளையும் நாட்டு வெடிகுண்டுகளையும் அவர்கள் ஏராளமாக புதைத்து வைத்துள்ளனர். அத்துடன் ஆங்காங்கே பெரும் பள்ளங்களையும் வெட்டி அதில் இராணுவ வாகனங்கள் கவிழ்ந்துவிழ ஏற்பாடு செய்துள்ளனர்.

நகரை முதலில் சுற்றி வளைத்த நேட்டோப் படைகள் நண்பகலில் அங்குள்ள மிகப் பெரிய கடை வீதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

வீடுகளுக்குள் தலிபான்கள் மறைந்திருக்கின்றனரா என்று தேடுதல் வேட்டையில் ஈடுபட ஆப்கானிஸ்தான் இராணுவவீரர்களைப் பயன்படுத்துகின்றனர்.

நகரில் இப்போது பொதுமக்கள் தங்கள் வீட்டு ஜன்னல்களையும் வாசல் கதவுகளையும் ஓரளவுக்கு மட்டும் அவ்வப்போது திறந்து வைத்து வெளியில் என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்க்கின்றனர். நேட்டோப் படை வீரர்களோ ஆப்கானிஸ்தான் இராணுவ வீரர்களோ எதையாவது கேட்டால் தயங்காமல் பதில் அளிக்கின்றனர்.

வெள்ளிக்கிழமை முன்னிரவிலிருந்தே தலிபான்கள் மோட்டார் சைக்கிள்களில் இரண்டிரண்டு பேராக எல்லா வீதிகளுக்கும் வந்து அவசர அவசரமாக குழிகளைத் தோண்டி கண்ணிவெடிகளைப் புதைத்ததாக அப்துல் காதர் (44) என்ற கடைக்காரர் தெரிவித்தார்.

பல இடங்களில் குடும்பப் பெரியவர்கள் தங்கள் வீட்டுப் பெண்களையும் குழந்தைகளையும் வீட்டுக்குள்ளேயே இருக்குமாறு கூறியுள்ளனர். வீட்டுக் கதவை உட்பக்கமாக தாள் போட்டுக் கொண்டு இருங்கள்.

யார் கூப்பிட்டாலும் வெளியே வராதீர்கள் என்று கூறிவிட்டு ஆங்காங்கே கூடி அடுத்து என்ன செய்யலாம் என்று தங்களுக்குள் ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைக்கு நேட்டோ படைகளின் மேஜர் ஜெனரல் நிக் கார்ட்டர் தலைமை வகிக்கிறார். அமெரிக்கா, பிரிட்டன், கனடா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். ஆப்கான் படைகளுக்கு இந்தப் பகுதியின் தலைவராக இருக்கும் ஜெனரல் ஷேர் முகம்மது ஜஜாய் உதவி வருகிறார். இத்தகவல்களை தலைநகர் காபூலில் இராணுவ அமைச்சர் ரஹீம் வர்த்தக் நிருபர்களிடம் தெரிவித்தார்.

தலிபான்கள் படையில் இப்போது 400 பேர் முதல் ஆயிரம் பேர் வரைதான் இருப்பார்கள் என்றும் அவர்களில் 100 பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தெற்குப்பகுதி நகரைக் கைப்பற்றியதன் மூலம் தலிபான்களின் இராணுவ பலத்தைப் பெருமளவுக்கு முறியடித்துவிட்டதாக அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த நகரைச் சுற்றி வளைத்ததைவிட இந்த நகரைத் தொடர்ந்து தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே முக்கியம் என்று கருதும் நேட்டோ தளபதிகள் வெகுவிரைவில் நகரில் இயல்பு வாழ்க்கை திரும்பவும் மக்களுக்கு வளர்ச்சித் திட்டங்களை அமுல் செய்யவும் விரும்புகின்றதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் நகர பாலங்களிலும் குண்டுகள் புதைக்கப்பட்டிருந்ததால் அந்தப் பாலங்களுக்கு மேலாக தற்காலிகப் பாலங்களை அமைத்து அதன் வழியாகத்தான் துருப்புக்கள் உள்ளே நுழைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)




## டில்லியில் நடைபெறவுள்ள பேச்சில் காஷ்மீர் பிரச்சினையை எழுப்புவோம்

### பாகிஸ்தான் பிடிவாதம்

(இஸ்லாமாபாத்)

டெல்லியில் 25ஆம் திகதி இந்தியாவுடன் நடக்க இருக்கும் பேச்சில் காஷ்மீர் பிரச்சினையை எழுப்புவோம் என்று பாகிஸ்தான் பிடிவாதமாகக் கூறியுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே நடந்து வந்த அமைதிப் பேச்சு மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டது. பேச்சுத் தொடர வேண்டும் என்று இந்தியாவை பாகிஸ்தான் தொடர்ந்து வற்புறுத்தி வந்தது. அதையொட்டி வெளியுறவுச் செயலாளர்கள் முன்னிலையில் பேச்சு நடத்த இந்தியா முன்வந்தது.

அதேசமயம் தீவிரவாதம் பற்றித்தான் பேச்சுவார்த்தையில் முக்கியமாக விவாதிக்கப்படும் என்று இந்தியா கூறியது. அதன்படி வரும் 25ஆம் திகதி டெல்லியில் இந்திய வெளியுறவு செயலாளர் நிருபமாராவும் பாகிஸ்தான் வெளியுறவு செயலாளர் சல்மான் பஷீரும் சந்தித்து பேசவுள்ளனர். இந்தப் பேச்சுப் பற்றி பாகிஸ்தான் வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் அப்துல் பாஷித் கூறியதாவது;

டெல்லியில் நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனை எதையும் இந்தியா விதிக்கவில்லை. அதனால் அந்தப் பேச்சுவார்த்தையில் காஷ்மீர் பிரச்சினை, நதிநீர் பங்கீடு, பலுசிஸ்தான், ஆப்கானிஸ்தானில் இந்தியாவின் தலையீடு உட்பட எந்தப் பிரச்சினை பற்றியும் விவாதிக்க பாகிஸ்தானுக்கு சுதந்திரம் உண்டு. காஷ்மீர் மக்களுடைய சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும்.

ஆப் கானிஸ்தானில் காபூல் நதியில் அணை கட்ட இந்தியா ரூ. 5 கோடி முதலீடு செய்து இருக் கிறது. அதன் மூலம் சிந்து நதிக்கு வரும் தண் ணீரின் அளவு குறையும். இந்தப் பிரச்சினை கள் பற்றியும் பாகிஸ்தான் விவாதிக்கும். இவ்வாறு அப்துல் பாஷீத் கூறினார்.

இதற்கு இடையே பாகிஸ்தான் வந்துள்ள பாலஸ்தீன அதிபர் முகமது அப்பாசிடம் அப்துல் ராசாக் கிலானி பேசும்போது; பாலஸ்தீன பிரச்சினையும் காஷ்மீர் பிரச்சினையும் ஒன்றுதான்.

பாலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாதவரை மத்திய கிழக்கு ஆசியா வில் எப்படி அமைதி திரும்பாதோ அதே போல் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணாத வரையில் தெற்கு ஆசியாவிலும் அமைதி திரும்பாது என்று கூறியிருக்கிறார். அவரது இந்தப் பேச்சு இந்தியாவுக்கு கவலை அளித்திருக்கிறது. (2-6)

### 24 வருடங்களிற்குப் பின்

## சூடானில் தேர்தலுக்கான பிரசாரங்கள் ஆரம்பம்

சூடானில் அதிபர் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான அதிகாரபூர்வ பிரசாரங்கள் ஆரம்பமாகியுள்ளன. கடந்த 1986ஆம் ஆண்டிற்குப் பின்னர் அங்கு நாடாளுமன்றத் தேர்தல்கள் நடப்பது இதுவே முதன் முறையாகும்.


இங்கு அதிபர் தேர்தலில் முப்பது ஆண்டு களாகப் பதவியில் இருக்கும் தற்போதைய அதிபர் ஓமர் அல்பஷீருடன் சேர்ந்து 11 பேர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தற்போது அதிபர் பஷீர் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாக ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் சர்வதேச நீதிமன்றில் போர் குற்றங்கள் சுமத்தப்பட்ட இவருக்கு தேர்தல் வெற்றி ஆதரவாக இருக்கும் என பி.பி.சி. செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (2-6)

## நெல்சன் மண்டேலா-ஒபாமா சந்திப்பு





(வோஷிங்டன்)

நெல்சன் மண்டேலாவை அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா நேற்று முன்தினம் சந்தித்தார். இது குறித்து வெள்ளை மாளிகையின் ஊடகத்துறைச் செயலர் ராபர்ட் கிப்ஸ் கூறியது.

தென்னாபிரிக்க நாட்டின் தலைவர் நெல்சன் மண்டேலா (91) சிறையில் இருந்து விடுதலையான 20ஆம் ஆண்டு விழாவை கொண்டாடி வருகிறார்கள். இந்நிலையில் அவரை அமெரிக்க அதிபர் ஒபாமா சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது மண்டேலாவின் விடுதலை விழாவை அமெரிக்க மக்களும் மகிழ்ச்சியோடு கொண்டாடி வரவேற்பதாக ஒபாமா தெரிவித்தார் என்றார்.

தென்னாபிரிக்காவில் நிலவிய இனவெறியை எதிர்த்துப் போராடிய நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் சிறைத் தண்டனைக்குப் பின்னர் 1990ஆம் ஆண்டில் விடுதலையானது குறிப்பிடத்தக்கது. (2-6)

# மாசி மாதப் பலன்கள்



## சிங்கம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

புகழ்மிக்கவர்களின் பட்டியலில் இடம் பிடிக்கும் சிங்க ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்திலேயே ராசிநாதன் சூரியன் பஞ்சம அஷ்டமாதிபதியான குருவோடும், மூன்று, பத்துக்கு அதிபதியான சுக்ரனோடும் இணைந்து கூட்டுக்கிரக யோகத்தை உண்டாக்குகிறார். இதன் விளைவாக இல்லத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும். இதுவரை விலகி இருந்த சொந்தங்கள் இனி விரும்பி வந்து சேரும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காண்பீர்கள்.

சொல்லை செயலாக்க முடியவில்லையே என்ற கவலை இனி அகலும். ஏழரைச் சனியின் ஆதிக்கத்தில் உங்கள் ராசி இருப்பதால் முதல் சுற்று நடப்பவர்களும், மூன்றாவது சுற்று நடப்பவர்களும் வாழ்வில் வளர்ச்சி ஏற்பட வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. குறிப்பாக சனி தற்சமயம் வக்ரத்தில் இருப்பதாலும் யோகம் செய்யும் செவ்வாய் வக்ரத்தில் இருப்பதாலும் எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

மாதக் கடைசியில் தனாதிபதி நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வரவைக் காட்டிலும் செலவு கூடும். குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் தலைதூக்கலாம். வெளியில் அதிக அளவு செல்வாக்கு பெற்ற நீங்கள் வீட்டிற்குள் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் அமைதியைக் காண இயலும்.

பெப்ரவரி 19ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். தனலாபாதிபதியான புதன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியைப் பார்க்கும் பொழுது பணப் புழக்கம் அதிகரிக்கும். தொழில் வளம் மேலோங்கும்.

வங்கிச் சேமிப்பு உயரும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். செலவுகளைக் குறைத்துக் கொண்டு சேமிப்புக்களை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்வீர்கள். உறவினர்களுக்கும் கொடுத்து உதவ வேண்டு மென்ற எண்ணம் உருவாகும். வாகன யோகம் உண்டு.

மார்ச் 3ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் உச்சம் பெறுகிறார். மூன்றாமிடத்திற்கு அதிபதி

**சிவல்புரி சிங்காரம்**

உச்சம் பெறுவதால் உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும். உங்கள் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அவர்கள் பெரும்பங்கு வகிப்பர்.

தொழில் வளம் ஏற்படும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். தன்னம்பிக்கையும், தைரியமும் உங்களுடன் இணைந்து செயற்படுவதால் பொருளாதார நிலையை மேலும் உயர்த்திக் கொள்வீர்கள்.

மார்ச் 8ஆம் திகதி மீன ராசியில் புதன் நீச்சம் பெறுகிறார். எனவே தனலாபாதிபதியின் நீச்ச காலத்தில் வரவைக் காட்டிலும் செலவு கூடும். சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது. இடமாற்றச் சிந்தனைகள் அதிகரிக்கும். அரசியலில் உள்ளவர்களுக்குப் பொறுப்புக்கள் மாறலாம்.

இம்மாதம் சிவன் வழிபாடு உங்கள் செல்வ வளத்தை மேலோங்க வைக்கும்.



## கன்னி

**(உத்தரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)**

எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யும் கன்னி ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசியிலேயே சனி வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். எனவே ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை அதிகரிக்கும். தனாதிபதியும், விரயாதிபதியும் சுக ஸ்தானாதிபதியுடன் இணைந்து ஆறில் சஞ்சரிப்பதால் சுகபோகச் செலவுகளும், மருத்துவச் செலவுகளும் கூடும். தொழிலில் எதிர்பார்த்தபடியே இலாபம் கிடைத்தாலும் அவற்றில் பெரும் பங்கு விரயமே ஏற்படும்.

எனவே கூட்டாளிகளிடம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வீட்டில் உள்ளவர்களையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் வேண்டிய நற்பலன்களைப் பெறலாம். இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றச் சிந்தனைகளை ஓரிரு மாதங்களுக்குத் தள்ளி வைப்பது நல்லது. ஏனென்றால் அதிச்சாரத்தில் மீன ராசியில் குரு சஞ்சரிக்கும் வரை பொறுமையைக் கடைப்பிடிப்பதன் மூலம் பொன்னான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

மாதக் கடைசியில் ராசிநாதன் நீச்சம் பெறுவதால் வழிபாடுகளை மேற்கொள்வதன் மூலமே வளர்ச்சிப்பாதையை அமைத்துக் கொள்ள இயலும். குறிப்பாக குலதெய்வ வழிபாடு உங்கள் குழப்பங்களுக்கு வடிகாலாக அமையும்.

பெப்ரவரி 19ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். ராசிநாதன் தனாதிபதியுடன் கூடும் இந்த நேரத்தில் உத்தியோகத்தில் ஊதிய உயர்வுகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். எதிரிகள் விலகுவர். மேலதிக வருமானங்கள் பெருகும். உற்சாகமும், தன்னம்பிக்கையும் உள்ளத்தில் குடிகொள்ளும்.

மாற்று வைத்தியத்தில் மனக்கலக்கம் தந்த வியாதி மறையும். கூட்டாளிகளில் ஒரு சிலர் உங்களை விட்டு விலகினாலும் கவலைப்படத் தேவையில்லை. புதிய கூட்டாளிகள் வந்திணைவர். பிள்ளைகளின் கல்வி முயற்சிக்காகவும் திருமணத்திற்காகவும் செய்த முயற்சிகள் கைகூடுவதற்கான வாய்ப்புக் கிட்டும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு.

மார்ச் 3ஆம் திகதி 2, 9இற்கு அதிபதியான சுக்ரன் ஏழில் சஞ்சரிக்கும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். பாராட்டும், புகழும் கூடும். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். திடீர் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக வந்து சேரும். அஞ்சல் வழியில் அனுகூலச் செய்தி உண்டு. பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

ராசிநாதன் புதன் மார்ச் 8ஆம் திகதி மீன ராசியில் நீச்சம் பெறுகிறார். எனவே வாங்கல் – கொடுக்கல்களில் சில தடுமாற்றங்கள் ஏற்படலாம். வழக்குகளில் இழுபறி நிலை உருவாகும். தொழில் நிலையங்களை திடீரென மாற்ற வேண்டிய சூழ்நிலை அமையும். எதிரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. இல்லம் கட்டி குடியேற வேண்டுமென்ற எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

இம்மாதம் இனிய வாழ்வமைய சனீஸ்வரரை வழிபட்டு வருவது நல்லது. காக வாகனத்தான் வழிபாடு யோகத்தைச் சேர்க்கும்.

(தொடரும்)

---

# மயானத்தைப் புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

(வேலணை)

வேலணை வெள்ளைக் கடற்கரையில் அமைந்துள்ள சாட்டி மயானத்தின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த மண்டபமானது முழுமையாக சிதைவுற்று தற்போது மேல் கூரையற்று உருக்குலைந்து காணப்படுகின்றது.

மேலும் உடலை எரியூட்டும் இடத்திற்கு அமைக்கப்பட்ட கொட்டகையும் மேல் கூரையின்றி இரும்புத் தூண்களாகவே உள்ளன. இதனால் மழை காலத்தில் இறந்த உடல்களை எரிப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இத்துடன் சாவீட்டிற்கு வந்து சுடலையில் நடைபெறும் சடங்கில் கலந்து கொள்பவர்களும் ஓய்வு மண்டபம் இன்மையால் மழை மற்றும் வெயில் காலங்களில் சிரமப்படுகின்றனர்.

இதனால் இவ் மயானத்தை உரியவர்கள் தமது கவனத்திலெடுத்து புனரமைப்புச் செய்து தருவதுடன் இதனை சுற்றி வேலி அல்லது மதிலைக் கட்டித்தர ஆவன செய்ய வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

# புராதனத் துறைமுகக் கட்டமைப்பு பற்றிய அகழ்வாராய்ச்சித் திட்டம்

(கொழும்பு)

இலங்கையைக் கேந்திரமாகக் கொண்டு இந்து சமுத்திரத்தில் அமைந்திருந்த புராதனத் துறைமுகக் கட்டமைப்புத் தொடர்பான அகழ்வாராய்ச்சிகளை நடத்துவதற்கான திட்டமொன்றை தொல்பொருள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தை இங்கிலாந்து ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம், றுஹுனுப் பல்கலைக்கழகம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் என்பவை கூட்டாக நடைமுறைப்படுத்தவுள்ளதாக தொல்பொருள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிமல் பெரேரா தெரிவித்தார்.

இவ்வாய்வின் முதற்கட்டமாக மன்னாரின் புராதன மாதோட்டம் துறைமுகம் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் ஆரம்ப அகழ்வாய்வுகளின்போது சுமார் 3 ஆயிரத்து 800 வருடங்களுக்கு முன்னர் துறைமுகம் அமைந்திருந்தற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கலாநிதி நிமல் பெரேரா குறிப்பிட்டார்.

மேலும் கற்களாலான ஆயுதங்கள், ரோம, சீன நாணயங்கள் என்பவையும் இதன்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (2-6)

# கண்டி மாநகர மேயர் தற்காலிகமாக பதவி நீக்கம்

கண்டி மாநகர மேயர் எல்.பி. அலுவிஹாரவை (ஐ.தே.க.) உடனடியாக மேயர் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கியிருப்பதாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார். கண்டி மாநகர மேயர் எல்.பி. அலுவிஹார தொடர்பாக பல்வேறு ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆரம்ப விவாதங்கள் மூலம் தெரியவந்ததனை அடுத்து அவரை அப்பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கத் தீர்மானித்ததாகவும் முதலமைச்சர் தெரிவித்தார். (2-6)

# மட்டக்களப்பு மேயரை பதவியிலிருந்து நீக்குமாறு வேண்டுகோள்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாநகர சபை மேயர் சிவகீத பிரபாகரனை மேயர் பதவியிலிருந்து உடனடியாக நீக்க வேண்டுமென தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் அஸாத் மௌலானா தெரிவித்துள்ளதாவது;

இறுதியாக நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் எமது அமைப்பு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வின் அடிப்படையிலேயே குறிப்பிட்ட தேர்தலில் எமது வேட்பாளர்களையும் நிறுத்தியது.

எமது கட்சியின் மூலம் நிறுத்தப்பட்ட வேட்பாளரான சிவகீதா பிரபாகரன் வெற்றி பெற்றதையடுத்தே அவரை மட்டக்களப்பு மாவட்ட மேயராக நியமிக்க வேண்டுமென நாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உயர் பீடத்தைக் கேட்டிருந்தோம். அதற்கமைவாகவே அவருக்கு மேயர் பதவியும் வழங்கப்பட்டது.

ஆனால் அவர் அண்மையில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்தார். இதற்கு முன்னர் கூட எமது கட்சியின் ஆலோசனைகளைப் பெறாத நிலையிலேயே சில முடிவுகளையும் மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையில் இவரை எமது கட்சியில் தொடர்ந்தும் வைத்திருப்பதில் அர்த்தம் இல்லை. இந்த விடயத்தில் எமது கட்சிக்குத் தார்மிகப் பொறுப்புள்ளது. அதனை நிறைவேற்றவும் வேண்டியுள்ளது. இதன் முதல்கட்டமாக மட்டக்களப்பு மாநகர மேயர் பதவியிலிருந்து இவரை நீக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பாக நாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் அமைச்சர் சுசில் பிரமேஜயந்தவிடம் எமது நியாயங்களை எடுத்துக் கூறியுள்ளதுடன் அவரை உடனடியாக மேயர் பதவியிலிருந்து நீக்குமாறும் கேட்டுள்ளோம்.

இதுதவிர மட்டக்களப்பு மாநகர சபையால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றும் கொண்டு வரப்பட்டு அதிலும்கூட அவருக்கு எதிராக பெரும்பாலானோர் வாக்களித்துள்ளனர் என்றார்.

மட்டக்களப்பு மாநகர சபை மேயர் சிவகீத பிரபாகரன் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்; தான் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அங்கத்தவர். அந்தக் கட்சியினால்தான் எனது விவகாரங்களைக் கையாள முடியும்.

என்னை மேயர் பதவியிலிருந்து நீங்குமாறோ அல்லது நான் நீக்கப்பட்டுள்ளதாகவோ கூட்டமைப்பின் செயலாளரான சுசில் பிரேம்ஜயந்தவிடமிருந்து எவ்வித அறிவித்தலும் எனக்குக் கிடைக்கவில்லை.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடுவதா இல்லையா என்று நானே தீர்மானிக்காத நிலையில் என்னைத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தவிர்த்துக் கொள்வது பற்றி மற்றவர்கள் ஆலோசிப்பதில் எவ்வித பயனுமில்லையென்று அவர் குறிப்பிட்டார். (2-6)

எஜமானருக்கு ஜலதோஷம் தொடங்கினால்– வேலைக்காரர்கள் தும்முவதற்கு ஆரம்பிப்பார்கள் – போலந்து

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறு அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸில் பேரணி

(கொழும்பு)

இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறு இலங்கையில் பல ஆர்ப்பாட்ட பேரணிகள் நடந்துவரும் நிலையில் அமெரிக்கா கலிபோர்னியாவிலுள்ள லொஸ் ஏஞ்சல்ஸிலும் பேரணி நடந்துள்ளது.

அங்கு வசித்துவரும் இலங்கையர்கள் ஒன்று கூடி கடந்த வெள்ளிக்கிழமை இந்த அமைதிப் பேரணியை நடத்தியுள்ளனர். இந்த பேரணியை ஒரு குறிப்பிட்ட அமைப்பும் ஏற்பாடு செய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் அனைவரினது கையொப்பங்களும் அடங்கிய மனுவொன்று இலங்கை தூதரக பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முகவரியிடப்பட்ட இந்த மனுவில் சரத் பொன்சேகாவின் கைதுக்கு தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளதோடு அவரை விடுவிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (6)

# பொன்சேகா அடைக்கப்பட்டிருக்கும் இடம் தடுப்பு முகாமாக அரசாங்கம் பிரகடனம்?

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவை தடுத்து வைத்திருக்கும் கடற்படை முகாமை இலங்கை அரசாங்கம் ஒரு தடுப்பு முகாமாக வர்த்தமானி ஊடாக பிரகடனம் செய்துள்ளது.

அரசாங்கம் போருக்குப் பின்னர் பல தடுப்பு முகாம்களை நிறுவியது. ஆனால் அவற்றினை வர்த்தமானியில் பிரகடனம் செய்யவில்லை தற்போது பல தடுப்பு முகாம்களை உத்தியோக பூர்வமாக வர்த்தமானியில் தடுப்பு முகாம்களாக பிரகடனம் செய்துள்ளது. சட்ட ரீதியாக தப்புவதற்கே இந்த ஏற்பாடு என விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

இதற்கு காரணம் பொன்சேகாவினை கைது செய்து தடுத்து வைத்திருப்பதே. இதன்படி பொன்சேகாவை தடுத்து வைத்திருக்கும் இடமான வெலிசர கடற்படையினரின் முகாம், திருகோணமலை டொக்கியாட் கடற்படை முகாம், கெமுனு வோற்ச் முகாம், வவுனியா நெலுக்குளம் பொலிஸ்நிலையம், தொழில் நுட்பக் கல்லூரி ஆகியனவே தற்போது தடுப்பு முகாம்களாக வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இதனைவிட 8 தடுப்பு முகாம்களில் 12 ஆயிரம் பேரை அரசாங்கம் உத்தியோக பூர்வமற்ற தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்துள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. (ச–5)

# ஐ.ம.சு.மு. சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து தமிழர்கள் போட்டியிடவுள்ளனர்

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் ஐந்து தமிழர்கள் போட்டியிடவுள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆறுமுகன் தொண்டமான், முத்து சிவலிங்கம், ஜெகதீஸ்வரன் ஆகியோரும் மலையக தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும், பிரதியமைச்சருமான வி.புத்திரசிகாமணி, தொழிலாளர் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சருமான எஸ்.அருள்சாமி ஆகிய ஐவருமே ஐ.ம.சு.மு. சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர்.

இதேபோன்று, கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க.சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற எஸ்.பி.திஸாநாயக்க எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார்.

இவர்களுடன் முன்னாள் அமைச்சர் சீ.பி. ரட்ணாயக்க, மத்திய மாகாண சபை உறுப்பினர்களான குமார் தஸநாயக்க, நிமால் பியதிஸ்ஸ ரணசிங்க ஆகியோரும் ஐ.ம.சு.மு. சார்பில் போட்டியிடவுள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கமும் இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவுள்ளன.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பில் அச் சங்கத்தின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான பி.திகாம்பரம், அச் சங்கத்தின் பிரதி தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான உதயகுமார், இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான எஸ்.சதாசிவம், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் தலவாக்கலை லிந்துவ நகர சபை முன்னாள் உப தலைவர் எல். பாரதிதாசன், முன்னாள் இ.தொ.கா. அமைப்பாளர் ஆர். யோகராஜன் உட்பட ஐ.தே.க. சார்பில் ஒரு தமிழ் வேட்பாளரும் போட்டியிடவுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இவர்களுடன் மத்திய மாகாண சபை உறுப்பினர் கே.கே. பியதாஸ, ஐ.தே.க நுவரெலியா அமைப்பாளரும் நுவரெலியா மாநகர முதல்வருமான சந்த லால் கருணாரட்ன, முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஜி.எம்.எம்.பியசிறி ஆகியோரும் போட்டியிடுகின்றனர். (6)

# பொதுத் தேர்தல் பிரசாரத்தில் மக்களுக்கு எதைச் சொல்ல முடியும்?

பொதுத் தேர்தல் களைகட்டத் தொடங்கி விட்டது.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு சரியான முறையில் நடைபெற்றதா? இல்லையா என்ற ஆய்வுகள் அத்தனையும் நாடாளுமன்றக் கலைப்போடு அஸ்தமனமாகிப் போயின.

இப்போது பொதுத் தேர்தல் காலம். நாடாளுமன்றத்திற்கு செல்வதற்கான வியூகம் அமைக்கும் பணியில் அரசியல் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இதில் தமிழ்க் கட்சிகளும் விதி விலக்கல்ல.

தமிழ்க் கட்சிகளை பொறுத்தவரை இப் பொதுத் தேர்தலில் பலரும் போட்டியிடும் வாய்ப்பு உள்ளது.

வெற்றி தோல்வி என்பதற்கு அப்பால், தேர்தலில் போட்டியிட்டோம் என்ற பெருமை போதுமென்பதாக நிலைமை உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை தேர்தலில் போட்டியிடுவது மட்டுமன்றி, இவர்களை விலக்கி விட வேண்டும் என்பதிலும் தீவிரம் காட்ட வேண்டிய நிலையுள்ளது.

இருபத்திரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற கணிசமான எண்ணிக்கையை கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தத் தகுதியை நாடாளுமன்றக் கலைப்போடு இழந்து போயிற்று.

இவ் எண்ணிக்கையை நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் பெற்றுக்கொள்ள முடியாதென்ற உண்மையையும் அக் கட்சி அறியாததல்ல.

அதேநேரம் தனது கட்சியில் இருந்து சிலரை விலக்க முற்படும்போது அவர்கள் நிச்சயம் சுயேட்சையாகவோ அன்றி வேறு கட்சிகளுடன் இணைந்தோ போட்டியிடுவார்கள்.

அவ்வாறு அவர்கள் போட்டியிடுவார்களாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளார்ந்தங்கள் கப்பல் ஏறும் என்பதும், இது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்த்துப் போட்டியிடும் கட்சிகள் ஆசனத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

எதுவாயினும் நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில், நாங்கள் நாடாளுமன்றம் சென்றால் இதனைச் செய்வோம் என்று உத்தரவாதம் வழங்கும் பிரசாரங்களுக்கு இடமிருக்க மாட்டாது.

மாறாக ஒருவரை ஒருவர் கடித்துக் குதறி குலைத்துக் கொள்வதைத் தவிர வேறுவழியும் இல்லை.

# சபாநாயகரின் மகன் ஆளும் கட்சியில் இணைவு

(கொழும்பு)

சபாநாயகரும் ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட உறுபினருமான வி.ஜே.மு.லொக்குபண்டாரவின் மகனான உதித்த சஞ்சய, ஆளும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதுளை அப்புத்தளை தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இளைஞர்களுக்கு வாய்ப்பை வழங்கவேண்டும் என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணத்திற்கு ஏற்பவே இந்தநியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் உதித்த, எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் பதுளை தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவரின் மகன் இவ்வாறு கட்சி மாறியிருப்பது இன்றைய முக்கிய செய்தியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு




நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காக மட்டுமே வாழ்கிறார்கள். மற்றவர்களுடைய நன்மைக்காக அறிஞன் தன்னைத் தானே தியாகம் செய்து விட வேண்டும். உனக்குத் தானே தியாகம் செய்வதன் மூலமாகத்தான் என்னுடைய நன்மையை நான் பெற முடியும். இதைத் தவிர வேறு ஒரு வழியுமில்லை.

கிராமம் கிராமமாகச் சென்று மனித குலத்திற்கும் பரந்த இந்த உலகத்திற்கும் நன்மை செய். மற்றவர்களுக்கு முக்தியை வாங்கிக் கொடுப்பதற்காக நீ நரகத்திற்கு செல்ல வேண்டும். மரணம் வருவது இவ்வளவு உறுதியாக இருக்கும் போது நல்ல ஒரு காரியத்திற்காக உயிரை விடுவது மேல்.

# அவுஸ்திரேலியாவில் உயர்கல்வி

சிறந்த தகுதி வாய்ந்த சர்வதேச மாணவர்களை ஈர்ப்பதில் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்கள் முன்னணியில் உள்ளன. உலக அளவில் அவுஸ்திரேலிய பல்கலைக்கழக படிப்புகளுக்கு உள்ளஅங்கீகாரம் கலாசார மாறுபாடுகளை உள்ளடக்கிய பல்கலைத் துறைகள் அவுஸ்திரேலியாவின் சிறப்பான வாழ்க்கைமுறை போன்ற காரணங்களால் அவுஸ்திரேலியா சிறந்த படிப்புகளுக்கான சரணாலயமாக திகழ்கிறது. இதனால் வெளிநாட்டு மாணவர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.இவற்றில் புதுமையான கல்வி முறைகள், திறமை வாய்ந்த ஆசிரியர்கள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த கல்வி வசதிகள் வழங்கப்படுவதால் இங்கு பயிலும் மாணவர்கள் எதிர்கால சமுதாய தேவைக்கேற்ற முக்கிய அங்கமாக உருவாகின்றார்கள். இங்கு சிறப்பான கல்வி தரப்படவேண்டும் என்ற நோக்கில் அவுஸ்திரேலிய அரசு அதிக மானியங்களையும்பிற உதவிகளையும் அதிக அளவில் தருகிறது. இதனால் அவுஸ்திரேலிய கல்வியானது அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் கல் விச் செலவை விட குறைவாகவே இருக்கிறது. அவுஸ் திரேலியாவில் மொத்தம் 39 பல்கலைக்கழ கங்கள் உள்ளன. இவற்றில் 37



பல்கலைக் கழகங்களுக்கு அவுஸ்திரேலிய அரசாலும் 2 பல்கலைக்கழகங்களுக்கு தனியாராலும் நிதியுதவி தரப்படுகிறது. சராசரியாக இவை ஒவ்வொன்றிலும் 3000 முதல் 50000 மாணவர்கள் படிக்கின்றார்கள். பட்டப்படிப்பு, சான்றிதழ் படிப்புகள், பி.எச்டி. போன்ற படிப்புகள் தரப்படுகின்றன. ஒன்றுக்கு மேற் பட்ட படிப்பைக்கூட இணைந்து ஒரே சமயத் தில் படிக்கும் வாய்ப்பும் உண்டு.

அவுஸ்திரேலியா கல்வியின் சிறப்பம்சங்கள் என வெளி நாட்டு நிறுவனங்களோடு கூடிய இணைந்து செயலாற்றும் உடன்பாடு, ஆய்வு நெறிமுறைகள் ஆகியவற்றைக் கூறலாம். அவுஸ்திரேலியாவில் 100க்கும் மேற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. இதனால் ஆய்வுத்துறைகளில் அவுஸ்திரேலியாவே முதன்மையாக விளங்குகிறது.

மரபியல் பயோடெக்னொலஜி, நானோ டெக்னொலஜி மற்றும் விளையாட்டு தொடர்பான துறைகளில் அவுஸ்திரேலியா முன்னணியில் உள்ளது. விளையாட்டை அறிவியல் நோக்கில் அணுகுவதால் கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களில் அவுஸ்திரேலியா பல ஆண்டுகளாக உலகசம்பியனாக திகழ்கிறது. மரபு சார்ந்த் மற்றும் மரபு சாரா துறைகளில் புதுமையான பல படிப்புகளை அவுஸ்திரேலியா அறிமுகப்படுத்தியிருக்கிறது.

**சில முக்கிய படிப்புகளும் பல்கலைக்கழகங்களும்**

சுற்றுச்சூழல் தொடர்பான படிப்புகள் சிலவற்றை அவுஸ்திரேலிய பல்கலைக் கழகங்கள் தருகின்றன.

டாஸ்மேனியா பல்கலைக்கழகம் அண்டார்டிகா தொடர்பான ஆய்வுப் படிப்பைத்தருகிறது. மெக்கொயர் பல்கலைக்கழகம் புரதப்பொருள் ஆய்வுமூலமாக புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் முறைகளை தந்திருக்கின்றது. பயோடெக்னொலஜி, பயோ இன்பர்மேடிக்ஸ், உயிரி மூலக்கூறுகளின் மரபியல் போன்ற படிப்புகள் இந்த பல்கலைக்கழகத்தால் தரப்படுகிறது.

தெற்கு குவீன்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் தாவரங்கள் மற்றும் அது தொடர்பான பொருட்களை வணிக ரீதியில் பயன்படுத்துவது தொடர்பான சிறப்புப் படிப்பைத் தருகிறது. இதுபோன்ற படிப்பை தரும் பல்கலைக்கழகம் அவுஸ்திரேலியாவில் மட்டுமே உள்ளது என்பது குறிப்பி டத்தக்கது.

ஸ்வின்பர்ன் பல்கலைக் கழகம் வான்கோளவியல் சார்ந்த சிறந்த கணனிகளை வடிவமைப்பதில் சிறந்து விளங் குகிறது. அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் மில்லி செகண்ட் பல்சர்களை உரு வாக்க இப்பல்கலைக்க ழகம் பெரும்பங்காற்றியிருக்கிறது. விக்டோரியா தொழில்கல்வி பல்கலைக்கழகம் தீவிபத்து மற்றும் சுற் றுச்சூழல் பொறியியல் துறை படிப்புக்களைத் தருகிறது. இப்பல் கலைக்கழத்தின் பரிந்துரைப்படி உலகெங்கும் தற்போது தீ விபத்துக்களிலிருந்து தப்ப உதவும் கட்டட மாதிரிகள் உருவாக்கப்படுகின்றன. தெற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் இன்ஜினியர்கள் மற்றும் சயின்டிஸ்ட்களுக்கான சிறப்பு எம்.பி.ஏ.படிப்பைத்தருகிறது. தொழில் ரீதியான நிர்வாகப் படிப்புக்களைத் தரும் சிறந்த பல்கலைக் கழகங்களில் பெரும்பாலானவை அவுஸ்திரேலியாவில் தான் உள்ளன.



அவுஸ்திரேலியாவின் பிற முக்கிய பல்கலைக்கழகங்கள் இவைதான்,

- யுனிவர்சிட்டி ஒப் டாஸ்மானியா
- யுனிவர்சிட்டி ஓப் ஒலகாங்
- யுனிவர்சிட்டி ஒப் குவின்ஸ்லாந்து

நகரங்களிலிருந்து தொலைவில் உள்ள மாணவர்களுக்கு உதவும் வகையில் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்கள் தொலைதூர கல்வியைத் தருகின்றன. இலேர்னிங் (E-Learning) மற்றும் ஒன்லைன் படிப்புக்களிலும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. இதனால் வெளிநாட்டு மாணவர்களும் சிறப் பான ஒன் லைன் கல்வியைப் பெற முடிகிறது.

அவுஸ்தி ரேலியாவில் மொத்தம் 55 பல் கலைக்கழகங்கள் எம்.பி.ஏ.படிப்பைத் தருகின்றன. 16மாதங்கள் முதல் 2 ஆண்டுகளுக்குள் எம்.பி.ஏவை ஒருவர் நிறைவு செய்ய முடியும். 2ஆண்டு படிக்க செலவு செய்ய முடியாதவர் 16 மாதங்களில் படிக்கும் வாய்ப்புத்தரப் படுகிறது. அவுஸ்தி ரேலிய பல்கலைக்கழகங்களுக்கி டையே உள்ள

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

- அவுஸ்திரேலியன் கிராஜுவேட்
- ஸ்கூல் ஒப் மனேஜ்மெண்ட்
- கிராஜுவேட் ஸ்கூல் ஒப் மனேஜ் மெண்ட்
- மொனாஸ்மௌண்ட்எலிசாபிசினஸ் ஸ்கூல்
- மெல்பேர்ன் பிசினஸ் ஸ்கூல்
- அவுஸ்திரேலியன் நசனல் யுனிவர்சிட்டி
- யுனிவர்சிட்டி ஒப் கான்பரா

கேம்ப்ஸ் என்னும் ஏற்பாட் டின்படி பல்கலைக்கழகழகங்களுக்குள் ஒரு மாணவர் மாறிச் சென்று படிக்கும் வசதி தரப்படுகிறது. அவுஸ்திரேலிய கல்விக் கட்டணம் சர்வ தேச கட்டணங்களோடு ஒப்பிட்டால் குறை வுதான்.

(தகவல்கள் வரும்)

# பதட்டம் குறைக்க பயிற்சிகள்

பரீட்சை என்று சொன்னாலே பலருக்கு பதட்டம் தானாக வந்து விடும். பதட்டம் அதிகமானதும் படித்தது மறந்துவிடும். படித்ததெல்லாம் மறந்த பின் பரீட்சை எழுதும் போது பயம் வந்துவிடும். பரீட்சைக்கு பயந்தால் நினைவிலுள்ள தகவல்கள் கூட மறந்து விடும். இப்படி பரீட்சை நேரத்தில் குழம்பிப்போன சிலர் நன்கு படித்திருந்தும் பரீட்சையை சில முறையில் எழுத இயலாத நிலையே ஏற்பட்டு விடுகிறது. எவ்வளவு தான் சிறப்பாக படித்திருந்தாலும், பரீட்சை நேரங்களில் ஏற்படும் குழப்பங்களையும் அதனை தவிர்க்கும் முறையில் வழிகளையும் மாணவர்கள் முன்கூட்டியே தெரிந்து கொள்வது நல்லது ஆகும்.

படித்த பாடங்களை திரும்பத்திரும்ப படிப்பதன் மூலம் *(Revision)* அந்த பாடத்தை நினைவில் எளிதில் மனதில் பதிய வைக்கலாம். மேலும் எப்பொழுதெல்லாம் அந்த தகவல்கள் தேவைப்படுகின்றதோ அப்போதெல்லாம் அவற்றை உபயோகித்துக் கொள்ள முடியும். பரீட்சைக்கு 15 நாட்களுக்கு முன்பே ஏற்கனவே படித்த பாடத்தை திரும்பவும் படிப்பது அவசியமாகும்.

திருப்புதல் நேரத்திட்டம் *(Revision Time Table)* ஒன்றை வகுத்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் எவ்வளவு மணிநேரம் ஒரு பாடத்தை திரும்ப படிக்க வேண்டும்? என்பதை முன் கூட்டியே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். நேரம் இருந்தால் கடந்த ஆண்டு நடந்த பரீட்சையில் கேள்வித் தாள்களில் இடம்பெற்ற கேள்விகளுக்கான பதில்களை நீங்களே எழுதி திருத்தி புள்ளிகளை வழங்கிக் கொள்ளலாம். இதன் மூலம் உங்களை நீங்களே மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

சில மாணவர்கள் இப்படி முன்கூட்டியே திட்டமிடாமல் பரீட்சைக்கு முதல்நாள் இரவு நேரங்களில் வெகு நேரம் விழித்துத் தொடர்ந்து படிப்பார்கள். தொடர்ந்து இப்படி அதிக நேரம் கண்விழித்துப் படித்தது பழக்கமில்லாமல் திடீரென அதிக நேரம் கண்விழிக்கும் போது உடலில் பிரச்சினைகள் ஏற்பட்டு விடுகிறது. சிலருக்கு தீராத தலைவலி ஏற்படும். காய்ச்சல் கூட ஏற்பட்டு பரீட்சை எழுத இயலாத நிலை சில நேரங்களில் ஏற்பட்டுவிடும். எனவே திட்டமிட்டு முன் கூட்டியே ஒரு நேரத் திட்டத்தை வகுத்துக் கொண்டு படிக்கலாம்.

சிலரது பாடசாலை அல்லது கல்லூரி வெகு தூரத்தில் இருக்கலாம். பஸ்ஸில் பயணம் செய்யும் போது புத்தகத்தை எடுத்து படிக்க இயலாத நிலை உருவாகும். சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் போது பயணம்



செய்யும் நேரத்தையே படிக்கும் நேரமாக மாற்றிக் கொள்ளலாம்.

பரீட்சையில் அதிக புள்ளிகள் எடுக்க வேண்டிய ஆர்வத்தில் சிலர் ஒய்வு எடுக்காமல் படிப்பார்கள். ஓய்வெடுப்பதற்கும் சிந்திப்பதற்கு தகுந்த நேரத்தை ஒதுக்கத் தவறியவர்களுக்கு படிக்கும் போது குழப்பம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. எனவே தூக்கத்தை தியாகம் செய்வதை தவிர்த்து தேவையான அளவு தூக்கத்தை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

பரீட்சை நேரத்தில் அதிக நேரம் ஓய்வெடுக்க பலருக்கு நேரம் இருக்காது. எனவே சிறிது நேரம் ஒய்வெடுத்து, பெரிய அளவில் புத்துணர்வு பெற சில பயிற்சிகளை பழகிக் கொள்ளலாம்.

(அடுத்தவாரம் வளரும்)

## ஆயுள்வேத மருத்துவம்

ஆயுள்வேத மருத்துவமானது மிகவும் பழமை வாய்ந்த மருத்துவ முறை என்பதை நாம் அறிவோம்.

இதன் தோற்றக் காலம் கி.மு. 600 ஆம் ஆண்டு என கருதப்படுகிறது. ***ஆயுள்வேதா*** எனும் சொல் சமஸ்கிருத மொழி வகையை சேர்ந்ததாகும். ஆயுள் என்றால் ***உயிர்*** மற்றும் வேதா என்றால் ***அறிவு*** என்பது பொருளா கும்.

ஆயுள்வேத மருத்துவ துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் ***வைத்யாஸ்*** என அழைக்கப்படுகின்றனர். இவர்களது பணியானது உறுதியான உடல்நலம், இயற்கையான அழகு மற்றும் நீண்ட கால வாழ்க்கை உள்ளிட்டவற்றை அளிப்பதாகும்.

**ஆயுள்வேதத்தின்சிறப்பு**


ஆயுள்வேத மருத்துவ முறைப்படி உயிர் என்பது மனம், ஐம்புலன்கள், உடல் மற்றும் ஆன்மா உள்ளிட்டவையின் இணைப்பாகும்.

மனித இனம் மற்றும் இயற்கைக்கு இடையே முழுமையான இணைப்பு உள்ளதாக மருத்துவ அமைப்பு கூறுகிறது. இவை இரண்டுக்கும் இடையே எப்போது பிளவு ஏற்படுகிறதோ, அப்போது தான் நோய்களின் தாக்கம் ஏற்படுகிறது.

(தொடரும்)

## பி.எஸ்.குமாரசாமி ஞாபகார்த்த இருபது-20 கிரிக்கெட் தொடர்

# சுதாகரன் சாதனைச் சதம்; ஜொலிஸ்ரார்ஸ் அணி சம்பியன்


என்.சுதாகரன்

(யாழ்ப்பாணம்)

சுதாகரனின் அதிரடிச்சதத்தின் மூலம் ஜொலிஸ்ரார்ஸ் அணி 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியை வீழ்த்தி பி.எஸ்.குமாரசாமி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது.

முன்னாள் அதிபர் பி.எஸ்.குமாரசாமி ஞாபகார்த்த இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடைபெற்றது. இத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ். ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியும் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் மோதின. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொலிஸ்ரார்ஸ் அணி சுதாகரனின் அதிரடிச்சதத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்களை எடுத்தது. இதில் என்.சுதாகரன் 61 பந்துகளில் (16 பவுண்டரிகள், 08 சிக்ஸர்கள் அடங்கலாக) 127 ஓட்டங்களையும் ஜனார்த்தனன் 15 பந்துகளில் (04 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 21 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் கே.சி.சி.சி. அணி சார்பாக றொபேசன் 5 விக்கெட்டுக்களையும் நதீஸ்வரன், நிரூஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 205 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடி கே.சி.சி.சி. அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழ்ந்து 116 ஓட்டங்களை எடுத்து 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதன் மூலம் பி.எஸ்.குமாரசாமி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை யாழ். ஜொலிஸ்ரார்ஸ்விளையாட்டுக்கழக அணிகைப்பற்றியது.


யாழ். ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணி

இதில் வல்லவக்குமரன் 22 பந்துகளில் (08 பவுண்டரிகள் அடங்கலாக) 38 ஓட்டங்களையும் கேதீஸ்வரன் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார்ஸ் அணி சார்பாக பகீர்தன் 3 விக்கெட்டுக்களையும் லக்ஸ்பி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

**சுதாகரன் சாதனை**

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் முதல் முறையாக சதம் அடித்த வீரர் என்ற சாதனையை யாழ். ஜொலிஸ்ரார்ஸ் அணி வீரர் என்.சுதாகரன் படைத்தார்.

அத்துடன் 61 பந்துகளில் சதம் அடித்து சுதாகரன் தனது சாதனையை மேலும் பலப்படுத்தியுள்ளார்.

இப்போட்டியின் நாயகனாகவும் இச்சுற்றுத் தொடரின் நாயகனாகவும் என்.சுதாகரன் தெரிவானார்.

# ஆரம்பத்தில் அசத்தல்; பின் சொதப்பல் சகீர், சிங்கிடம் பணிந்தது தென்னாபிரிக்கா


சகீர்கான்

(கொல்கத்தா)

சகீர்கான், ஹர்ப்பஜன் சிங்கின் சிறப்பான பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாத தென்னாபிரிக்க அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 266 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் கடந்தவாரம் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இந் நிலையில் தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று கொல்கத்தாவில் ஆரம்பமானது.

இப் போட்டியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான அணித் தலைவர் சிமித் 4 ஓட்டங்களை எடுத்த நிலையில் சகீர்கானின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக பீற்றர்சனுடன் இணைந்த அம்லா பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி நம்பிக்கை அளித்



ஹர்பஜன் சிங்

தனர். இதில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய பீற்றர்சன் 55 பந்துகளில் அரைச்சதத்தைக் கடக்க தென்னாபிரிக்க அணி 19.5 ஓவர்களில் 100 ஓட்டங்களை தொட்டது.


ஹசிம் அம்லா

மறுமுனையில் அம்லா 70 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்து நம்பிக்கை அளித்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப் பாட்டத்தின் மூலம் தெனனாபிரிக்க அணி வலுவான நிலையை அடைந்தது.

இவ் ஜோடியைப் பிரிக்க அணித்தலைவர் தோனி களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்த போதும் பலனளிக்காமல் போக தென்னாபிரிக்க அணி 44.2 ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது.

இதில் ஹசிம் அம்லா 124 பந்துகளில் தனது 9ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்ய மறுமுனையில் பீற்றர்சன் 166 பந்துகளில் தனது கன்னிச்சதத்தை பதிவு செய்தார்.

இரண்டாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 209 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது பீற்றர்சன் 164 பந்துகளில் (16 பவுண்டரிகள் அடங்கலாக) 100 ஓட்டங்களை எடுத்து சகீர்கானின் பந்துவீச்சில் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத் ஜக்கலிஸ் களமிறங்க மறுமுனையில் ஹசிம் அம்லா 166 பந்துகளில் (14 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 114 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 229 ஓட்டங்களை எடுத்து 3 ஆவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து ஏ.பி.டி.வில்லியர்ஸ், கலிஸுடன் இணைந்து நிதானமான ஆட்டத்தை வழங்கினார்.



பீற்றர்சன்

எனினும் ஜக்கிலிஸ் 10 ஓட்டங்களுடனும் பிறின்ஸ் ஒரு ஓட்டத்துடனும் டுமினி பூச்சியத்துடனும் ஹர்ப்பஜன் சிங்கின் பந்துவீச்சிலும் டி.வில்லியர்ஸ் 12 ஓட்டங்களுடன் ரண் அவுட் முறையிலும் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 254 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

அடுத்து களமிறங்கிய கரிஸ் ஒரு ஓட்டத்துடனும் ஸ்ரையன் 05 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபிலும் அதன் முதலாவது இன்னிங்ஸில் 266 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்களை இழந்துள்ளது.

இதில் பார்னல் 02, மோர்கல் 03 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா, மிஸ்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# ஒருநாள் தொடர் அவுஸ்திரேலியா வசம்

(பிரிஸ்பேன்)

அணித்தலைவர் பொன்டிங்கின் சிறப்பான சதத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நான்காவது ஒருநாள் போட்டியிலும் வெற்றிபெற்று 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது. அவுஸ் திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரில் 2:0 என்ற நிலையில் முன்னிலைபெற மூன்றாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக முடிபின்றி கைவிடப்பட்டது. இந்நிலையில் நான்காவது ஒருநாள் போட்டி நேற்று பிரிஸ்பேனில் நடைபெற்றது. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி பொன்டிங்கின் சிறப்பான சதத்தின் மூலம் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 324 ஓட்டங்களை எடுத்தது. இதில் அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் 112 பந்துகளில் (6 பவுண்டரிகள், 02 சிக்ஸர்கள் அடங்கலாக) 106 ஓட்டங்களையும் வைற் 63 ஓட்டங்களையும் ஹோப்ஸ் 21 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் சிமித், சமி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 274 ஓட்டங்களை மாத்திர மெடுத்து 50 ஓட்டங்கள்வித்தியாசத்தில்தோல்வியடைந்தது.

இதில் பொல்லாட் 62, சிமித் ஆட்டமிழக்காமல் 59 டியோனரினி 53 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் பொல்லிங்கர், ஹரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது. ஆட்ட நாயகனாக அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங் தெரிவானார்.

## அமைச்சர்...

மாகாண ஆளுனர் மொஹான் விஜேவிக்ரமவிடம் சமர்ப்பிக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சராக ஹிஸ்புல்லா தற்போது கடமையாற்றி வருகின்றார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## கல்வி கற்பதற்கு வயது தேவையில்லை

கல்வி கற்பதற்கு வயது ஒரு தடையில்லை என்பதைத் தென்னிலங்கையில் உள்ள ஒரு முதியவர் நேற்று உறுதிப்படுத்தியுள்ளார். அம்பலாங்கொடயைச் சேர்ந்த பி.றிச்சாட் என்ற 85 வயது முதியவர் பௌத்த நாடகக் கல்லூரியில் இறுதி யாண்டுப் பரீட்சைக்கு நேற்றுத் தோற்றியிருந்தார். தன்னை விட 60 வருடங்கள் வயதில் குறைந்த மாணவர்களுடன் அவர் இந்தப் பரீட்சையை எழுதினார். ஓய்வு பெற்ற நாடகக் கல்வி ஆசிரியரான றிச்சாட் முன்னர் இறுதி ஆண்டுப் பரீட்சை எழுத வில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# விடுதலைப்புலிகளின் வலையமைப்பை முறியடிக்கத் தொடர்ந்து முயற்சி

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் வெளிநாடுகளில் மிகப் பெரும் வலையமைப்பைக் கொண்டுள்ளனர். அவற்றில் பெருமளவானவற்றை நாம் முறியடித்துள்ளோம்.

எனினும் அதனை முறியடிக்கும் பணிகள் தொடரப்பட வேண்டும் எனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் மேலும்தெரிவித்துள்ளதாவது;

இலங்கையில் மேலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாதுகாப்புச் செயலாளர் ஆகிய நான் நாட்டில் உறுதித் தன்மையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பில் உள்ளேன்.

விடுதலைப்புலிகள் வெளிநாடுகளில் மிகப் பெரும் வலையமைப்பைக் கொண்டுள்ளனர். அவற்றில் பெருமளவானவற்றை நாம் முறியடித்துள்ளோம். எனினும் அதனை முறியடிக்கும் பணிகள் தொடரப்பட வேண்டும்.

எமது படையினர் எவ்வளவு தரமானவர்கள் என்ற புரிந்துணர்வுகள் மக்களிடம் இல்லை. கிழக்கு மாகாணத்தில் இராணுவம் நிலை கொண்டிருக்க வேண்டும் என பெருமளவான மக்கள் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் பொலிஸார் அங்கு நிலைகொள்வதை விரும்பவில்லை. நாம் பயிற்சி பெற்ற இராணுவத்தைக் கொண்டுள்ளோம். அவர்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அதிகம் பங்கு கொள்ள முடியும் என்றார். (ச-5)

## நாடாளுமன்றத் தேர்தலின்...

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து போட்டியிடவுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது கூட்டமைப்பு 4 தமிழ்க்கட்சிகளை உள்ளடக்கிய கூட்டமைப்பாகும். நாம் வடகிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளோம். கடந்த பொதுத் தேர்தலிலும் தனித்து போட்டியிட்ட நாம் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பெற்று வெற்றிபெற்றோம்.

இம்முறை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலிலும் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு. நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் கூட்டமைப்பு ஒரு முடிபினை எடுத்து எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரை ஆதரவளிப்பது என முடிவு செய்து அதன்படி செயற்பட்டது.

இந்த முடிபினை நாம் தமிழ்மக்களுக்கு அறிவித்து அதனை ஏற்று கொண்டார்கள். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வேட்பாளரை ஆதரித்தமைக்காக பொதுத் தேர்தலில் நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று கிடையாது.

ஏனெனில் இன்று வட கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு ஒரு பலமான அரசியல் பிரதிநிதித்துவத்தை கொடுக்க வேண்டும். அதற்கான கடமையும் பொறுப்பும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு உண்டு.

இதனடிப்படையில் த.தே.கூ. வடகிழக்கில் தனித்துப் போட்டியிட தீர்மானம் செய்துள்ளது. பொதுத் தேர்தலின்பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் உட்பட அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து சிறுபான்மை மக்களின் (தமிழ்,முஸ்லிம்) சகல பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடியவாறு இணைந்து செயற்படுவது குறித்தும் கலந்துரையாடியுள்ளோம். இதனை பின்னர் செயற்படுத்த வும் உள்ளோம்.

நாம் எந்தவொரு காலத்திலும் எதிர்க்கட்சிகளின் கூட்டணியாக இணைந்து செயற்பட்டதில்லை. பொன்சேகாவை ஆதரிக்க வேண்டும் என்பதற்காகவே நாம் ஐ.தே.முன்னணியின் கூட்டணியில் செயற்பட்டோம்.

த.தே. கூட்டமைப்பு தற்போதும் பலமாக உள்ளது. கூட்டமைப்புக்குள் எந்தவொரு முரண்பாடுகளும் கிடையாது. அத்துடன் சிவாஜிலிங்கம் மற்றும் பலர் த.தே.கூட்டமைப்பின் வேட்பாளர்களாக நிறுத்தப்படமாட்டார்கள் என்றும் இது அவர்களின் கட்சி எடுத்த முடிபினை கூட்டமைப்பும் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் கூறினார். (ச-5,9)

## இராணுவத்தில் பொன்சேகாவை...

அவ்வாறு தேவைப்பட்டால் பொன்சேகாவை யாரும் கைது செய்ய முடியாது.

ஏனெனில் அவரை விட உயர்ந்த பதவி நிலையில் இராணுவத்தில் யாரும் இல்லை. எனினும் இராணுவக் காவல்துறையில் உயர் பதவி உள்ளவர் கைது நடவடிக்கைய்ய மேற்கொண்டுள்ளார்.

எனவே பொன்சேகா கைது செய்யப்பட்டதில் எந்த சட்டவிரோதமான செயற்பாடுகளும் இல்லை.

**கேள்வி:**-பொன்சேகாவுக்கு எதிரான வழக்குகளை ஏன் இராணுவமே மேற்கொண்டு வருகின்றது?

**பதில்:**- அவர் இராணுவத்தில் பணியாற்றிய போது மேற்கொண்ட குற்றங்கள் தொடர்பாகவே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே சம்பவம் நடைபெற்று ஆறு மாதங்களுக்கு இடையில் இராணுவத்திற்கே அதன் மீதான விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்புக்கள் உண்டு.

**கேள்வி:** ஏன் பொன்சேகாவுக்கு அவர் மீதான குற்றங்கள் தொடர்பான அறிக்கைகள் இதுவரை வழங்கப்படவில்லை?

**பதில்:** முதலில் அவருக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஆதாரங்கள் பட்டியலிடப்பட வேண்டும். பின்னர் அது நீதிபதியிடம் சமர்ப்பக்கப்பட வேண்டும். அதன் பின்னரே அவருக்கு எதிராக என்ன குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். அதற்கு சிறிது காலம் எடுக்கும்.

**கேள்வி:** தேர்தல் பிரசாரங்களின் போது பல இராணுவ அதிகாரிகள் வெளிப்படையாக ஜனாதிபதியை ஆதரித்ததாகவும், அவர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள் ளன. அது தொடர்பில் உங்களின் கருத்து என்ன?

**பதில்:** இராணுவத்தில் உள்ள யாரும் அவ்வாறான அறிக்கைகளை வெளியிடவில்லை. அதற்கான ஆதாரங்கள் யாரிடமாவது இருந்தால் அவர்கள் முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம். அது குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பொதுவாக படைத்துறை அரசின் அதிகாரங்களுக்கு ஆதரவாக இருப்பதுண்டு. அதனால் நாம் ஒரு குறிப்பிட்ட கட்சியை ஆதரிப்பதாக நான் இங்கு கூறவரவில்லை. ஆனால் ஆயுதப்படைகளாக நாம் அரசின் கீழ் பணிபுரிகின்றோம். யார் ஆட்சியில் உள்ளனர் என்பது அதற்கு ஒரு காரணமல்ல என்றார். (ச-5)

## நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில்...

ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பதன் மூலம் அரசாங்கத்தினால் பொதுத்தேர்தலில் வெற்றி பெற முடியாது. இதனை அரசாங்கம் உணர்ந்து செயற்படவேண்டும்.

பொன்சேகாவைக் கைது செய்து அவருக்கு வாக்களிப்பதில் பிரயோசனம் இல்லை என பிரசாரம் செய்து பொதுத்தேர்தலில் வெற்றி பெற அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இது ஒரு போதும் வெற்றியளிக்காது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய் தேசியக் கட்சி யானைச்சின்னம் என்ற தமது நிலைப்பாட்டிலிருந்து மாறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதென அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தில் போட்டியிடுவது என்ற தீர்மானத்தை எடுத்தாலும் அது ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானமே தவிர ஐக்கிய தேசிய முன்னணியின் தீர்மானம் அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

ஆகையால் ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவருடன் நடைபெறவுள்ள சந்திப்புக்களைத் தொடர்ந்து எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்ற இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஓர் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படவே விரும்புவதாகத் தெரிவித்த அவர், இதற்காக எவ்வகையான தீர்மானம் எடுக்கப்பட்டாலும் இசைவது எனவும் அவர் கூறினார். கொழும்பில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிச் சொன்னார். (ச-5.9)

## பொதுத்...

ஈ.பி.டி.பி. மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆகியன எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடுவதனை விடவும் சொந்தக் கட்சிச் சின்னத்தில் போட்டியிடுவதன் மூலம் கூடுதல் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என இக் கட்சிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

தனித்துப் போட்டியிட்டால் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் குறைந்த பட்சம் ஒவ்வொரு ஆசனத்தையேனும் வெல்ல முடியும் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஆசாத் மௌலாணா தெரிவித்துள்ளார். ஈ.பி.டி.பி. தனித்துப் போட்டியிடத் தீர்மானித்த காரணத்தினால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு புதிய வேட்பா ளர்களைத் தேடும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உள்ளிட்ட புத்திஜீவிகள் மற்றும் வர்த்த கர்களை தேர்தலில் களமிறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ச-5)

## இலங்கைத் தூதுவரை...

ஜெனரல் பொன்சேகாவைக் கைது செய்தது மற்றும் அமெரிக்கா மீது கோத்தபாய மேற்கொண்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கடும் சீற்றமடைந்த அமெரிக்கா, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவை அழைத்துத் தனது எதிர்ப்பை நேரில் தெரிவித்துள்ளது.

விக்கிரமசூரியவை வெளிவிவகார திணைக்களத்திற்கு அழைத்த அமெரிக்கா தனது எதிர்ப்பை அவரிடம் கையளித்துள்ளது.

இலங்கையின் அண்மைய நடவடிக்கைகள் தமக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாகக் கிழக்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்கத் துணை வெளிவிவகாரச் செயலாளர் றெபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இலங்கைவெளிவிவகார அமைச்சு அமெரிக்கத் தூதரகத்துடன் தொடர்பு கொண்ட போது இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் தான்எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை என அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் ஜெஃப் அன்ரர்சன் தெரிவித்துள்ளார்.

ஆனால் விக்கிரமசூரியவை அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களம் அழைத்துப் பேசியதை இலங்கை வெளிவிவகார அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது. (ச-5)

## பொதுத் தேர்தலில் யானைச்...

நாட்டில் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தமது கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுச் சின்னமான அன்னம் சின்னத்தின் கீழ் போட்டியிடவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தாம் ஒருபோதும் யானைச் சின்னத்தின் கீழ் போட்டியிட மாட்டோம் எனத் தெரிவித்த அவர், ஐக்கிய தேசியக் கட்சியில் எட்டப்பட்ட தீர்மானத்தினை அக் கட்சியின் தலைவர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவும் பொதுவான ஒரு சின்னத்தின் கீழே எதிர்வரும் பொதுத் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்ததாகவும் ஜனாதிபதித் தேர்தலைப் போன்று பொதுத் தேர்தலிலும் அன்னம் சின்னத்தின் கீழ் போட்டியிட அவர் இணக்கம் தெரிவித்திருந்ததாகவும் ரில்வின் சில்வா மேலும் குறிப்பிட்டார்.

அது மாத்திரமன்றி ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்த கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியன பொதுச் சின்னத்தின் கீழ் போட்டியிடத் தீர்மானித்ததாகவும் அவர்கள் அன்னம் சின்னத்தை ஏற்றுக் கொண்டதாகவும் அவர் இந்தச் செய்தியாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்.

ஆகையால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஓர் வெற்றிக் கூட்டணிய்ய அமைத்துப் பொதுச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெறுவோம் எனவும் அவர் தெரிவித்தார். (ச-5)

## எம்பிலிப்...

ஒரு கொலையாக இருக்கலாம் என்றும் இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை வத்தளைப் பகுதியில் இளைஞன் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவ் இளைஞனின் தலையில் பலத்த காயங்கள் இருப்பதாகவும் இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-9)

## சரத் பொன்...

அல்லது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தையோ பெற்றுக் கொள்ள முடியாது.

இந் நிலையில் ஜெனரல் சரத் பொன்சேகாவைக் கைது செய்து அரசாங்கத்தினால் பொதுத் தேர்தலில் வெற்றி பெற முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவைக் கைது செய்து அவருக்கு வாக்களிப்பது பிரயோசனம் இல்லை என பிரசாரம் செய்து பொதுத் தேர்தலில் வெற்றி பெற அரசாங்கம் முயற்சிக்கின்றது.

மக்கள் மத்தியில் சரத் பொன்சேகாவுக்கு உள்ள நன்மதிப்பை சீர்குலைக்கும் வகையில் அவரை ஒரு குற்றவாளியாகப் பிரதிபலிக்கச் செய்து அதனூடாக தேர்தலில் வாக்குகளைச் சுவீகரிக்கலாம் என அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழ்ச்சி ஒரு நாளும் வெற்றி பெறாது என ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ச-5,9)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.